Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 20 இதழ் - 8 ஆகஸ்ட் - 2007



இயேசுவின் நாட்களில் இருந்த
தேவாலயத்தின் எஞ்சியுள்ள மதில் சுவரின் ஒருபகுதி என்று இது நம்பப்படுகிறது.
இந்தச் சுவரைப் பிடித்துக் கொண்டும், முத்தமிட்டுக் கொண்டும் மேசியாவே வாரும் என்று
அழுது ஜெபிக்கும் யூதப் பெண்கள். வந்து சென்றுவிட்ட மேசியாவை வாரும்
என்று இன்னும் புலம்பும் இவர்களை என்ன சொல்வது?

(கடந்த செப்டம்பர் 2006 - ல் அடியார்கள் சென்றபோது எடுக்கப்பட்ட படம்)

# BIBLE MEDITATION

**TV PROGRAM**





## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. மகா பெரிய பொக்கிஷம் ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 21
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 23
7. இரத்தசாட்சிகள் ........ 27
8. காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக ........ 30

# THIRUMARAI AASAAN


S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 20 AUGUST - 2007 Issue - 8


ஆசிரியர் உரை

## கர்த்தரும், கன்றுக்குட்டியும்

இப்பூமியில் நாம் வாழும் இந்த நாட்களில் வியாபாரத் துறையிலிருந்து நம்மை நோக்கி வீசப்படும் வியாபாரக் கணைகளில் ஒன்று, "எக்ஸ்சேஞ்ச் ஆஃப்ர்" என்பது. இதன் பொருள், உங்களிடமிருக்கும் பழசாகிப் போன, பழுதாகிப்போன, தேய்ந்து போன, கெட்டுப்போன, மதிப்பிழந்து போன, பொருள்களை எங்களிடம் கொடுத்துவிட்டு, அதற்கு "மாற்றாக" புதியதை, சிறந்ததை, நல்லதை எடுத்துச் செல்லுங்கள் என்பது. வியாபாரிகளின் இந்தக் கணைகளால் தாக்கப்படும் ஒருவன், தன்னிடமோ, தங்களிடமோ இருக்கும் தரம் கெட்டுப்போனதைக் கொடுத்துவிட்டு, **கொடுத்ததைக் காட்டிலும் எல்லா வகையிலும் மேம்பட்ட ஒன்றை** கூடுதல் பணம் கொடுத்து குதூகலத்தோடு எடுத்துச் செல்லுவான்.

இந்த "மாற்று" முறை, வியாபாரத் துறைக்கு மாத்திரம் சொந்தமல்ல. விளையாட்டுத் துறையிலும் இந்த வார்த்தை வழக்கத்திலுள்ள ஒன்றாகவே இருக்கிறது. ஆம், ஓர் அணிக்காகவோ அல்லது ஒரு நாட்டுக்காகவோ விளையாடும் ஒருவன் சரியாக விளையாடாத போதோ அல்லது விளையாட வேண்டிய அளவுக்கு விளையாடாத போதோ அல்லது காயமுற்று அவதிப்படும் போதோ அதைக் கவனிக்கும் பயிற்சியாளர், சம்பந்தப்பட்ட

வீரரை வெளியே அழைத்துக் கொண்டு, அவருக்குப் பதிலாக வேறொரு ஆட்டக்காரரைக் களமிறக்குவார். அப்படிப்பட்டவர் **மாற்று** ஆட்டக்காரர் என்றோ அல்லது **பதிலி** ஆட்டக்காரர் என்றோ அழைக்கப்படுவார்.

மொத்தத்தில், வியாபாரத்துறையாக இருந்தாலும், விளையாட்டுத் துறையாக இருந்தாலும் அல்லது வேறெந்தத் துறையாக இருந்தாலும், மாற்று அல்லது பதிலி என்று வரும்போது, அது இருப்பதைக் காட்டிலும் சிறந்ததாகவே இருக்கும் அல்லது இருக்க வேண்டும். சிறந்ததைக் கொடுத்து விட்டு, மோசமானதை ஒருவன் பெற்றால், அவன் ஊராலும், உலகத்தாலும் மதிகெட்டவனாகவே பார்க்கப்படுவான், உண்மைதானே. உயிரற்ற பொருளை மாற்றும்போதே, **அது சிறந்தாகவே இருக்க வேண்டுமென்ற** எழுதப்படாத சட்டம், இப்படி எல்லோராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒன்றாக இருக்கிறது.

இது உண்மையாக இருக்கும்போது, இந்த நியதிக்கு சற்றும் சம்பந்த மில்லாமல் பழைய ஏற்பாட்டு நாட்களின் இஸ்ரவேல் ஜனங்கள் எவ்வளவு மதிகெட்டு, தரம் கெட்டு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணும் போது, உண்மையில் அது ஆத்திரத்தையே கொண்டு வருகிறது. எப்படி இவர்களாலே இப்படி நடந்து கொள்ள முடிந்ததென்பது கற்பனைக்கு எட்டாத ஒன்றாகவே உள்ளது. ஆம், இவர்கள் **யேகோவாவிற்கு மாற்றாக கன்றுக் குட்டியைத்** தெரிந்து கொண்டார்கள். இவர்களின் இந்தத் தரம் தாழ்ந்த செயல் யாத்திராகமம் 32:1-8 வசனப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. கர்த்தரும், கன்றுக் குட்டியும் என்று தலைப்பிடுவதற்கே நான் மிகவும் சிரமப்பட்டேன். இது, கர்த்தரையும், கன்றுக்குட்டியையும் இணை வைப்பது போன்ற ஒரு தவறான தோற்றத்தையும், கருத்தையும் ஏற்படுத்தி விடுமோ என்று பயந்தேன். ஆனால், இந்த ஜனங்களுக்கோ, **கர்த்தருக்கு மாற்று கன்றுக் குட்டி** என்பதற்கு கூச்சமும் இருக்கவில்லை, அச்சமும் இருக்கவில்லை.

சரி, இதுபற்றி இன்னும் கூடுதலாகத் தெரிந்து கொள்ள நம்முடைய வழக்கமான பாணியில் இதன் பின்னணிக்குப் போவோம்.

எகிப்தின் அடிமைத்தனத்தில் சுமார் 400 ஆண்டுகள் சிக்கி சீரழிந்த மக்களை, கண்ணீரைக் காணும் யேகோவா, தன்னுடைய வல்லமையுள்ள கரங்களினாலும், ஓங்கிய புயத்தினாலும் விடுதலையாக்கி, பகலில் மேகஸ்தம் பத்தாலும் (யாத். 13:21), இரவில் அக்கினி ஸ்தம்பத்தினாலும் (யாத். 13:21) வழி நடத்தி வந்தார். இவர்களுக்குத் தூதர்களின் ஆகாரத்தைக் கொடுத்தார் (சங். 78:25). அப்பொழுது தேவன் அவர்களோடு கொண்டிருந்த உறவு மிகவும் அலாதியானது. அதை நாம், பாவம் செய்வதற்கு முன், ஏதேன் தோட்டத்தில் ஆதாம், ஏவாள் தேவனோடு கொண்டிருந்த உறவுக்கும், எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன் ஏனோக்கு தேவனோடு கொண்டிருந்த (ஆதி. 5:24) உறவுக்கும் ஒப்பிடலாம். ஆம், அது அவ்வளவு சிறப்பானது!

ஆனால், இந்த ஜனங்கள் என்ன செய்தார்கள்? தங்களுடைய கானான் பயணத்தின் ஒரு கட்டத்தில், தேவனுடைய பர்வதம் (யாத். 3:1;19:1-2) என்றழைக்கப்படும் சீனாய் மலையின் அடிவாரத்தில் பாளயமிறங்கினார்கள்.

இந்த ஜனங்கள் தேவனுடைய வல்லமையைக் கண்ணாரக்கண்டு, காதாரக் கேட்டவர்கள் (யாத். 19:16, 20:18). ஆம், தேவன் பேசிச் சொல்லிய வார்த்தைகள் என்று இருக்கிறபடியால் (யாத். 20:1) பயங்கரமான காட்சியோடு, தேவ சத்தத்தையும் இவர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்பொழுது அந்த தேவசத்தம் இவர்களுக்கு என்ன சொல்லிற்று? "**என்னை யன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக் கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம், .....**" (யாத். 20:2,4) என்றது.

நமக்கெல்லாம் வசனங்கள் ஆவியானவரால் அவருடைய தாசர்களைக் கொண்டு எழுதி கொடுக்கப்பட்டு நாம் வாசிக்கிறோமல்லவா அதுபோல் அவர்களுக்கு இல்லாமல், வார்த்தைகளோடு, தேவனுடைய சத்தத்தையும் **நேரிடையாக பயங்கரச் காட்சியோடு கேட்டிருக்கிறார்கள்.** (யாத். 19:19,22). ஜனங்கள் தேவ சத்தத்தையும், அந்தக் காட்சியையும் கண்டு பயந்த போது, "**மோசே ஜனங்களை நோக்கி; பட்யப்படாதிருங்கள்; உங்களைச் சோதிப்ப தற்காகவும், நீங்கள் பாவம் செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும், தேவன் எழுந்தருளினார்** என்றான்" (20:20) தேவசத்தமும், பயங்கரக் காட்சியும் தேவ வெளிப் பாட்டிற்கு மாறாக அவர்கள் **பாவம் செய்யாமலிருக்கும்படி** என்று தெளிவு படுத்தப்பட்டது. அப்படியானால், அவர்கள் தேவ காரியத்தில் எந்தளவு ஈடுபாடும், பயபக்தியுமுடைய வர்களாய் இருந்திருக்க வேண்டுமென்று எண்ணிப் பாருங்கள்!.

ஆனால், இந்தக் கேடு கெட்ட ஜனங்களுக்கோ நன்றியும் இல்லை, தேவனுக்குப் பயப்படும் பயமும் இல்லை. தாங்கள் **கண்டதையும், கேட்டதை யும்** அடியோடு மறந்தார்கள். ஆம், இவர்கள் கண்ட, இடி முழக்கங்களையும், மின்னல்களையும் எக்காள சத்தத்தையும், மலை புகைகிறதையும் மறந்தார் கள். **அத்தோடு தேவன் பேசும் போது அவர்கள் கொண்ட பயத்தையும், துப்புரவாக மறந்தார்கள்** (யாத். 20:18,19). எத்தனை நாட்களுக்குள்? எண்ணி நாற்பதே நாட்களுக்குள்! எப்படியிருந்திருக்கும் தேவனுக்கு? எப்படி யிருந்திருக்கும் புசியாமலும், குடியாமலும் (யாத். 34:28). 40 நாள் மலையிலிருந்த மோசேக்கு?

இந்த இஸ்ரவேல் ஜனங்கள் 32-ம் அதிகாரத்தில், தங்கள் நன்றி கெட்ட, தேவ பயமற்ற தன்மையை அரங்கேற்றினார்கள். மோசே மலையிலிருந்து இறங்கி வரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி அவனை நோக்கி; எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டு வந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்! ஆதலால், நீர் எழுந்து எங்களுக்கு **முன் செல்லும் தெய்வங்களை** எங்களுக்காக உண்டு பண்ணும் என்றார்கள் (யாத். 32:1). இவர்களின் ஆட்டம் இந்த வசனத்திலிருந்து தான் தொடங்குகிறது.

தன் சகோதரனாகிய மோசேயின் வாயாக இருக்கும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட விசேஷித்த மனிதனாகிய ஆரோன், ஜனங்கள் இப்படிக் கேட்ட போது என்ன செய்திருக்க வேண்டும்? முற்பிதாக்களின் காலத்தில், சோதோமின் மக்கள், தன் வீட்டுக்கு வந்த மனிதர்களை அறியும்படி, லோத்தின் வீட்டைச் சூழ்ந்து கொண்டு, அவர்களை வெளியே கொண்டு வா என்று நெருக்கிய போது, லோத்து, **"சகோதரரே, இந்த அக்கிரமம் செய்ய வேண்டாம்"** என்று கொஞ்சினது போல இவனும் எப்படியாவது போராடி முயற்சித்திருக்க வேண்டும். (ஆதி. 19:4-7). ஆனால், இந்த லோத்தை விட மேலான நிலையில் தேவனால் வைக்கப்பட்ட ஆரோனோ, ஜனங்களின் நெருக்குதலுக்கு எந்த எதிர்ப்பும் காட்டாமல் "ஆமென்" என்று சொல்லி, அவர்கள் ஆசைக்கு அசிங்கமாக அடிபணிந்தான். ஏன் இவன் இப்படிச் செய்தான் என்பது எனக்கு இன்றளவும் விளங்காத ஒன்றாகவே உள்ளது! அதற்கு ஆரோன், **உங்கள் மனைவிகள், குமாரர், குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டு வாருங்கள்** என்றான் (யாத். 32:2).

மகிமையும், மாட்சிமையும், வல்லமையும், பராக்கிரமும் நிறைந்த சர்வவல்ல தேவனுடைய அதிரும் வார்த்தைகளுக்கு அடங்காத இந்த மக்கள், அற்ப மனிதனாகிய இந்த ஆரோனின் வார்த்தைகளுக்கு உடனடியாகக் கீழ்ப் படிந்தார்கள். கீழ்ப்படியாதவர்கள் ஒருவர் கூட இல்லை போல் தெரிகிறது. ஏனெனில், **ஜனங்கள் எல்லாரும்** தங்கள் காதுகளில் இருந்த பொன்னணி களைக் கழற்றி ஆரோனிடத்தில் கொண்டு வந்தார்கள் (32:4) என்றுள்ளது. பிறகு, அவன் தன் கைத்திறனைக் காட்டி, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். **அப்பொழுது அவர்கள்**; "இஸ்ரவேலரே, உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள்" (32:4). இங்கே கவனியுங்கள், கன்றுக்குட்டியைச் செய்த ஆரோன், தன் வேலையை அதோடு முடித்துக் கொண்டான். ஏன், அவனுக்கு அதற்கு மேல் செயல்பட அனுமதியில்லையோ? தலையாட்டி பொம்மை யாகவும், சூழ்நிலைக் கைதியாகவும் இருந்தானோ? **ஜனங்கள் ஒருவரை யொருவர் பார்த்து, ".... உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றுள்ளார்கள்"** அப்பப்பா, எப்படிப்பட்ட ஜனங்கள்!

பிறகு ஆரோன், ஏதோ, அதிகாரம் தனக்கு இருப்பது போல், "அதைப் பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலி பீடத்தைக்கட்டி, நாளைக்கு **கர்த்தருக்குப் பண்டிகை** என்று கூறினான்" (32:5). "மறுநாள் அவர்கள் **அதிகாலையில்** எழுந்து, சர்வாங்க தகன பலிகளையிட்டு, சமாதான பலிகளைச் செலுத்தினார் கள்; பிறகு தங்கள் வழக்கமான விளையாட்டு. இந்த விளையாட்டில் இவர்கள் **மாம்சமும், மனசும்** விரும்பின எல்லாம் அடக்கம்! இவர்களைப் பொறுத்தளவில் பக்தி என்பது சாமிக்கும் இருக்க வேண்டும், ஆசாமிக்கும் இருக்க வேண்டும்! நம்முடைய நேர் பங்காளிகளாகவே காட்சி தருகிறார்கள்.

"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி; நீ இறங்கிப்போ; எகிப்து தேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டு வந்த உன் ஜனங்கள் தங்களைக் **கெடுத்துக் கொண்டார்கள்**. அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்....." என்றார் (32:8). எப்படியோ கர்த்தர் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு கன்றுக்குட்டி! கர்த்தருக்குக் கொடுக்க வேண்டிய அதே கனம், மரியாதை இந்த கன்றுக் குட்டிக்கும். ஆம், அதற்கு ஒரு ஆசாரியன், ஒரு பலிபீடம், ஒரு பண்டிகை, அதிகாலை பலி, பிறகென்ன இரண்டும் ஒன்று தான். அப்புறம் ஆட்டம் பாட்டம் தான், குடி கும்மாளம் தான். பக்தி என்றால், இப்படியல்லவா இருக்க வேண்டும்!.

இதுதான் மோசே மலையிலிருந்து வரத் தாமதமான போது, மலையடிவாரத்தில் ஜனங்களால் அரங்கேற்றப்பட்ட காரியங்கள். இப்பொழுது இதிலிருந்து, நம் ஒவ்வொருவருக்கும் என்ன பாடங்கள் கிடைக்கிறதென்று பார்ப்போம்.

## I மார்க்கத் தலைவர்களும், மதிகெட்ட ஜனங்களும்

கர்த்தரும், கன்றுக்குட்டியும் என்ற தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் **முதல் பாடம்**, வழி நடத்துபவர்களும், வழி நடத்தப்படுபவர் களும் ஏகமாய்க் கெட்டுப் போயிருக்கிறார்கள் என்பது.

தேவன், மோசேக்குக் கொடுத்த அதே கனத்தை கிட்டத்தட்ட அவன் சகோதரனாகிய ஆரோனுக்கும் கொடுத்தார் (யாத். 4:14-16). அவனிடத்தில் அதிகம் எதிர்பார்க்கப்பட்டிருக்கும் (லூக். 12:48). ஆனால், இவன் என்ன செய்தான்? ஜனங்களின் நெருக்குதலுக்கு முன் கேவலமாக மண்டியிட்டான். இதற்காகவா ஒருவன் தலைவனாகவும் அதிகாரமுடையவனாகவும் இருப்பது? வெட்கம்.

அங்கே, நாம் பார்க்கும் அதே சூழ்நிலை, இன்றைய கிறிஸ்தவத்தில் அப்படியே காணப்படுகிறது. சொல்லப்போனால், புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்திலேயே இந்த நிலை துவங்கிவிட்டது. அதிகாரத்தைக் கையிலே வைத்திருந்த பிலாத்து என்ன செய்தான்? இயேசுவை **நீதிமான்** என்று அறிந்திருந்தும் (மத். 27:24) ஜனங்களின் நெருக்குதலுக்கு அடிபணிந்து சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தான். நீதியின் குரலை நெறிப்பதற்காகாவா இவனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது?.

சரி, இவனாகிலும் அரசியல்வாதி, ஆன்மீகவாதிகளும் அப்படித்தான் இருப்பார்களென்று முன்னுரைக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலன் பவுல் தன்னுடைய அந்திய நாட்களில், விசுவாசக்குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, "ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, **தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு**, சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுக் கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்" (2தீமோ 4:3,4) என்றார்.

வரும் என்று முன்னுரைக்கப்பட்ட ஆபத்து, நம்முடைய நாட்களில் படு ஜோராக நடந்து கொண்டிருக்கிறது. அன்றைக்குக் கர்த்தரைப் பிடிக்காமல் கன்றுக்குட்டியை நாடினது போல், இன்றைக்கு கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தின ஆரோக்கியமான உபேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், **வசனங்களில் காணப்படாத கள்ள உபதேசங்களாகிய கன்றுக்குட்டியை** நாடுகிறார்கள். அன்றைக்கு ஆரோன், ஜனங்களின் அநியாய ஆசைக்கு அடிபணிந்தது போல், இன்றைக்கு, ஆன்மீகத் தலைவர்கள், மார்க்க வழிகாட்டிகள், குருக்கள், வரம் பெற்றவர்கள், அற்புதம் செய்கிறவர்கள் என்ற பெயர்களில் வலம் வரும் பல குருடரான வழிகாட்டிகள், ஜனங்களைத் தங்கள் பக்கம் சேர்த்துக் கொள்ளவும், தக்கவைக்கவும் பல கன்றுக்குட்டிகளை உருவாக்கித் தருகிறார்கள். சிலை வழிபாடு கன்றுக்குட்டி, பண்டிகைக் கன்றுக்குட்டி, ஓய்வு நாள் கன்றுக்குட்டி, தசமபாகக் கன்றுக்குட்டி, குழந்தை ஞானஸ்நானக் கன்றுகுட்டி, அந்நிய பாஷை கன்றுக்குட்டி, தீர்க்கதரிசனக் கன்றுக்குட்டி என்று சகட்டு மேனிக்கு உருவாக்கித் தருகிறார்கள். இப்படி வழிநடத்துபவர்கள் குறித்து இயேசு ஆண்டவர் சொல்லுவதைக் கவனியுங்கள். "அவர்களை விட்டு விடுங்கள், அவர்கள் குருடருக்கு வழி காட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார்" (மத். 15:14).

ஆகவே, நாம் எப்படிப்பட்ட ஜனங்களோடு இருக்கிறோம் என்பதிலும், எப்படிப்பட்டவரை நமது பக்திக்கு வழிகாட்டியாகக் கொண்டிருக்கிறோம் என்பதிலும் மிகவும் எச்சரிப்புடன் செயல்பட வேண்டும்.

## II கன்றுக்குட்டியும், பிரிவினைச் சபைகளும்

கர்த்தரும், கன்றுக்குட்டியும், என்ற தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் **இரண்டாவது பாடம்**, தேவ சத்தத்திற்கு மாறாக, கன்றுக்குட்டிகளாகிய பல சபைகள் மனிதனால் தோற்றுவிக்கப்பட்டுள்ளதென்பது.

தேவன் ஆரோனுக்கும், இஸ்ரவேல் ஜனங்களுக்கும் தெளிவாகவும், திட்டமாகவும் இப்படிச் சொல்லியிருந்தார். என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்று (யாத். 20:3). சர்வ வல்லமை கொண்ட யேகோவாவுக்கு மாற்றாக யாரும் இருக்க முடியாது. எதுவும் இருக்கமுடியாது. ஆனால், இவர்கள் என்ன செய்தார்கள்? தேவன் சொன்னதை கேட்கவில்லை. மாறாக, தங்கள் விருப்பம் போல் கன்றுக்குட்டிகளைச் செய்து, இவர்களாகவே சொல்லிக் கொள்ளுகிறார்கள், "....உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே" என்று (யாத். 32:4) இப்படி ஆரோன், ஜனங்கள் உட்பட எல்லோரும் ஏகமனதாகச் சொல்லி விட்டார்கள் என்பதால் கன்றுக்குட்டி தெய்வமாகிவிட்டதா? யேகோவாவிற்கு நிகராகிவிட்டதா? சொல்லுங்கள்.

அருமையானவர்களே! இன்றைக்கு கிறிஸ்தவ மத உலகில் இதே நிலை அப்படியே காணப்படுகிறது! எப்படி கர்த்தருக்கு மாற்றாக வேறே தேவர்கள் இருக்க முடியாதோ அதுபோலவே, **கிறிஸ்து கட்டின சபைக்கு மாற்றாக வேறு எந்த சபையும் இருக்க முடியாது**. சபையை, ராஜ்ஜியத்திற்கு ஒப்பிட்டு தீர்க்கதரிசனம் உரைத்த தானியேல் தீர்க்கன் **ஒரு ராஜ்யம்** என்றே குறிப்பிட்டுள்ளார் (தானி. 2:44). "இந்தக் கல்லின் மேல் **என் சபையைக்** கட்டுவேன்" (மத். 16:18) என்று இயேசு ஒருமையில் தான் வாக்களித்தார். இரட்சிக்கப்படுகிறவர் களைக் கர்த்தர் அனுதினமும் **சபையிலே** சேர்த்துக்கொண்டு வந்தார் என்று **ஒருமையில்** தான் உள்ளது. (அப். 2:47). இரத்தத்தைச் சிந்தி **தமது சபையைச்** சம்பாதித்தார் என்று **ஒருமையில்** தான் உள்ளது... (அப். 20:28). மேலும், எபேசியர் 4-ம் அதிகாரத்தில் காணப்படும் ஒன்றுகளில் **ஒரே சபை** (சரீரம் எபே. 4:4,12) என்று தான் உள்ளது. இன்னும் கிறிஸ்து மீண்டும் வரும்போது, தேவனும், பிதாவுமாயிருக்கிறவருக்கு **ராஜ்யத்தை (சபையை)** ஒப்புக் கொடுப்பார் (1கொரி. 15:24) என்றே உள்ளது. ஆக, **சபை ஒன்று தான் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்றுகள் வேண்டும்?** தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் அறிவைக் கொண்டு இதைக் கூடவா புரிந்து கொள்ள முடியாது?.

ஆனால், இன்றைக்கு யதார்த்த நிலை எப்படியுள்ளது? ஒரு யேகோவாவிற்குப் பதிலாக, கன்றுக்குட்டிகளாகிய பல தெய்வங்களை உண்டாக்கியது போல, இயேசு கிறிஸ்து இரத்தம் சிந்தி சம்பாதித்த ஒரு சபைக்குப் பதிலாக, நூற்றுக்கணக்கான சபைகளல்லவா உண்டாக்கியிருக் கிறார்கள்! பொன்கன்றுக்குட்டி தோற்றத்திற்கு அழகாகத்தானிருக்கும். அதற்காக அது யேகோவாவிற்கு மாற்றாகிவிட்டதா? எப்படி யேகோவா விற்கு மாற்றான கன்றுக்குட்டி, மனுஷருடைய கைவேலையாயிருந்ததோ (32:4, சங். 115:4) அதுபோல, கிறிஸ்துவின் சபைக்கு மாற்றான எதுவும், மனுஷ உபதேசங்களின்படியானதாகவே உள்ளது (மத். 15:9).

ஆகையால், பார்வைக்கு அழகாக இருக்கிறதென்பதற்காக பொன் கன்று குட்டிகளாகிய மனித சபைகளின் பின் செல்லாமல், கிறிஸ்துவின் உபதேசத்தைப் பின்பற்றி, கிறிஸ்துவின் சபைக்குள் அங்கமாகுங்கள்.

## III தேவ பார்வையும், மனித பார்வையும்

கர்த்தரும், கன்றுக்குட்டியும் என்ற தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் **இன்னுமொரு பாடம்**, தேவ பார்வை, மனித பார்வையிலிருந்து வேறுபட்டது என்பது.

ஈசாயின் குமாரர்களில் ஒருவனை ராஜாவாக அபிஷேகம் செய்யச் சென்ற சாமுவேல், முகத்தையும், சரீர வளர்ச்சியையும் பார்த்துத் தடுமாறிக்

கொண்டிருந்தபோது, தேவன் ஒரு பெரிய உண்மையை வெளிப்படுத்தினார். அது, **மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன், மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்று** (1சாமு. 16:7). அவர் தான் நம் கர்த்தர்.

ஆம், தேவன் மனித பார்வையோடு ஒத்துப்போவதில்லை. யாத்திராகமத்தில் என்ன நடந்தது? ஒரு பலிபீடம் கட்டப்பட்டது, நாளைக்கு பண்டிகை என்று கூறப்பட்டது. அதிகாலையில் எழுந்து பலிகள் செலுத்தப் பட்டது. வேடிக்கைகளும் அரங்கேற்றப்பட்டது (யாத். 32:5,6). எல்லாம் ஒருமித்த கருத்தோடு நடந்தது. அதுவும் என்ன சொல்லப்பட்டு நடந்தது? **"உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த தெய்வங்கள் இவைகளே"** (32:4) என்ற பெயரில். உண்மையில் யேகோவா வாகிய கர்த்தர் தான் இவர்களை அழைத்துக் கொண்டு வந்தார். ஆக, இது அவருக்காகச் செய்யப்பட்டது போன்ற ஒரு தோற்றத்தைத் தந்தது.

தோற்றம் மாத்திரமல்ல, செயலும் அப்படித்தான் இருந்தது. எப்படி? ஒரு பலிபீடம் கட்டி, நாளைக்கு கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறப்பட்டது. கவனியுங்கள், **பண்டிகை கர்த்தருக்காம்.** எப்படிப்பாருங்கள்! கண்களுக்கு முன்பாகக் கன்றுக்குட்டி. ஆனால், பேச்சு கர்த்தர் என்று. பிசாசு இப்படித்தான் இழுத்துக் கொண்டு போவான். அதிகாலையிலே எழுந்து சர்வாங்க தகனபலி என்ன, சமாதான பலி என்ன, ஒன்று கேட்கவே வேண்டாம்; இவர்கள் செயலைப் பார்த்தால் ஆஹா, இவர்களல்லவா பக்திமான்கள்; தங்கள் கர்த்தரை எப்படி கனப்படுத்துகிறார்கள் என்பது போன்ற செயல். கூடவே தங்களைக் குஷிப்படுத்துகிற காரியங்களும். மொத்தத்தில் இவர்கள் பக்தி முத்தி, பக்தி செயல்களில் சங்கிப்போகும் நிலைமை. எல்லோருக்கும் ஆஹா, ஓஹோ என்று ஏகதிருப்தியாக இருந்திருக்கும். அப்படித்தானே!

ஆனால், இவைகளையெல்லாம் கவனித்த கர்த்தர், மோசேயை நோக்கி; **நீ இறங்கிப்போ; எகிப்து தேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டு வந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள் என்றார்** (யாத். 32:7). எப்படிக் கெடுத்துக் கொண்டார்களென்று அடுத்த வசனத்தில் விளக்கினார். **நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள் என்றார்** (32:8).

அருமையானவர்களே தேவன் சொல்லுவதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? தேவன் சொல்லாத ஒன்றை, நாம் எத்தனை பேர் சேர்ந்து செய்கிறவர்களாக இருந்தாலும், நம்முடைய செயலுக்கு ஆரோனைப் போன்று எப்படிப்பட்ட ஒரு ஆன்மீக வழிகாட்டி துணை நின்றாலும், பக்தி என்ற பெயரில் நாம் எவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்தாலும் அது தேவ

பார்வையில் நமக்கு அங்கீகாரத்தைப் பெற்றுத் தரவே தராது. மாறாக, **தேவனுடைய சமூகத்தில் நம்மைக் கெடுத்துக் கொண்டவர்களாகவே காட்சி தருவோம்**. தேவனுடைய பார்வையில் இப்படிக் கெடுத்துக் கொண்டவர்களாகக் காட்சிதர நாம் யாரும் ஒருபோதும் விரும்பமாட்டோம்.

அப்படியானால், நாம் செய்ய வேண்டியது என்ன? தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் (பிர. 12:13). கிறிஸ்து கட்டின ஒரே சபையிலே அங்கமாக இருந்து, கிறிஸ்துவின் உபதேசத்தில் மாத்திரம் நிலைத்திருக்க வேண்டும். (2. யோவா 9). ஏனெனில், அவருடைய வசனமே நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் (யோவா 12:48).

அன்பானவர்களே, கன்றுக்குட்டிகளின் பின்பாகச் செல்லாமல் கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாக இருப்போமாக! ஆமென்.

***EZS ராஜநாயகம்***

**ஜெபியுங்கள் !** **பங்கு பெறுங்கள்!!**

## நற்செய்திக்கூட்டங்கள்

**"திருமறை ஆசான்" ஆசிரியரும், "திருமறை தியானம்" தொலைக்காட்சி நிகழ்ச்சி பேச்சாளருமான சகோ. ராஜநாயகம் அவர்கள் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் கலந்து கொண்டு தேவ செய்தி அளிக்கும் நற்செய்தி கூட்டங்கள்.**

| நாள் | நேரம் | இடம் |
|---|---|---|
| 19.08.2007 | மாலை 6.00 | பஸ்நிலையம் பின்புறம், சென்னிமலை. |
| 25.08.2007 | மாலை 6.00 | கொங்கணாபுரம். |
| 26.08.2007 | மாலை 5.30 | YMCA வளாகம், திருப்பத்தூர் |
| 2.09.2007 | மாலை 6.00 | T.B. ரோடு, சங்ககிரி |
| 9.09.2007 | மாலை 6.00 | கௌரி கணேஷ் திருமண மண்டபம், செராங்காடு, திருப்பூர். |

# மகா பெரிய பொக்கிஷம்

இயேசு ஸ்தாபிக்கப்படப்போகிற ராஜ்யம் அல்லது சபையைப் பற்றி விளக்குவதற்காக அநேக உவமைகளைக் கூறியிருக்கிறார். இவைகளுள் இரண்டும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. இயேசு சொன்னார் "அன்றியும் பரலோக ராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். மேலும், பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" (மத்தேயு. 13:44-46).

இன்றைய நாட்களில் பதங்கள் பயன்படுத்தப்படும் முறைமையில் உவமையானது ஒரு விளக்கமாக பிரிக்கப்படும். இது பூமிக்குரிய ஏதோ ஒன்றை எடுத்துக் கொண்டு அதிலிருந்து ஆவிக்குரிய பாடத்தை எடுப்பதை ஈடுபடுத்துகிறது. மேலே மேற்கோள்காட்டப்பட்டிருக்கிற உவமைகளில் இயேசு ராஜ்யம் அல்லது சபையை நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷமாகப் பேசுகிறார். பூமிக்குரிய பொக்கிஷமானது பொன், வெள்ளி, போன்றவைகளைப் போன்று விலையேறப்பெற்றதும் மிக முக்கியமானதுமாகும். இங்கே, பொக்கிஷமானது நிலத்தில் புதைந்து கிடக்கிறது. அதையாரும் கண்டு கொள்ளவில்லை அல்லது யாராலும் கண்டு கொள்ளப்படவில்லை. மற்றவர்கள் அதைப் பார்க்கவில்லை அல்லது அவர்கள் அதைப்பார்த்திருந்தாலும் அது என்னவென்று அடையாளம் கண்டு கொள்ளவில்லை, அதனுடைய மதிப்பை உணரவில்லை. எனவே, அதன்மீது அவர்கள் நடந்து சென்றார்கள். ஆனால், நாம் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த மனிதன் அதைத் தேடினதாலோ அல்லது அந்த வழியாக வரும்போதோ, இந்த குறிப்பிட்ட மனுஷன் இந்த பொக்கிஷத்தை கண்டுபிடிக்கிறான். அதைப்பார்த்து அதன் மகத்தான மதிப்பை உணர்ந்தவனாக மறுபடியும் அதை புதைத்து வைத்து விட்டு சந்தோஷத்துடன் சென்று அந்த நிலத்தை வாங்கும்படியாக தனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்கிறான். அந்த நிலம் அவனால் வாங்கப்பட்டபோது அந்த பொக்கிஷம் அவனுடையதாகிறது அதன்பின்பு அவன் எப்படி விரும்புகிறானோ அப்படி அந்த நிலத்தை எதுவேண்டுமானாலும் செய்ய உரிமை உண்டு.

**இரண்டாவது** உவமையும் முதல் உவமையை போன்றே இருக்கிறது. ஆனால், இந்த உவமையில் இந்த மனுஷன் நல்ல முத்துக்களைத் தேடுகிறவனாயிருக்கிறான். இவன் ஏதோ ஒரு முத்துக்காக எதிர்நோக்கிக்

கொண்டிருக்கவில்லை. அவன் எல்லா முத்துக்களைக் காட்டிலும் விலை மதிப்புள்ள ஒரு விசேஷமுத்தை விரும்புகிறான். இவன் ஒரு வியாபாரி மேலும் அவன் எதை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறானோ அதை அவன் நன்றாக அறிந்திருக்கிறான். இவனுடைய தேடுதலுக்கு வெற்றி பலனாக அளிக்கப்படுகிறது. அவன் விரும்பின முத்தை அவன் கண்டடைந்தபோது, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த விலையுயர்ந்த முத்தைக் கொள்ளுகிறான். இப்போது இந்த முத்து இவனுடையதாயிருக் கிறது. இதை இவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இந்த முத்தை இவன் வைத்துக் கொள்ளலாம், மற்றவர்களிடம் காட்டலாம், அல்லது இந்த விலையேறப்பெற்ற முத்தை விற்று பெரிய லாபம் சம்பாதிக்கலாம்.

இன்றைய நாட்களில் நிலம் வாங்குவது, பின்பு அதை நல்ல விலையில் விற்பது, அப்படி விற்று அதிக லாபத்தை ஈட்டுவது போன்ற காரியங்கள் நமக்கு நன்றாக பரிச்சயமானதே. ஆனால், ஏன் சிலர் இந்த வியாபாரங்களில் வெற்றி பெறுகிறார்கள் சிலர் வெற்றி பெறுவதில்லை? வெற்றி, தோல்வி எல்லாம் நீங்கள் எதைத் தேடுகிறீர்களோ எப்படி திட்டமிடுகிறீர்களோ, நீங்கள் எதிர்நோக்குகிறவைகளுக்காக, அந்த சாதனைக்காக என்னப் பிரயாசப்படு கிறீர்களோ அதைப் பொறுத்து அமையும். அநேகர் தாங்கள் எங்கே இருக்கி றார்களோ, தங்களிடம் எவைகள் இருக்கிறதோ அதில் திருப்திபட்டுக் கொள் கிறார்கள். எனவே, அவர்கள் பொக்கிஷத்தைத் தேடுவதோ அல்லது அதை பெற்றுக் கொள்வதற்கு பிரயாசப்படுவதோ அரிதாயிருக்கிறது.

ஆவிக்குரிய பிரகாரமாக ராஜ்யமாகிய "சபை" தான் அந்த பொக்கிஷமாயிருக்கிறது. இது வெளியே இந்த உலகத்தில் தான் இருந்து கொண்டு இருக்கிறது. இது ஏதோ ஒரு சபை அல்ல, அல்லது சபைகளுள் ஒன்று அல்ல. இவைகளுள் ஒன்றின் மேல் ஒருவன் விருப்பமுள்ளவனாயிருந்தால் அவன் அந்த உண்மையான பொக்கிஷத்தை ஒருபோதும் கண்டுபிடிக்க முடியாது.

ஆனால், நாம் வேதாகமத்தில் வாசிக்கின்ற ராஜ்யமாகிய கர்த்தருடைய சபையைக் குறித்து காணப்பட்டிருக்கும் உண்மைகளை கருத்தில் கொள்ளுங்கள். சபையானது நம்முடைய கர்த்தரால் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது (அப். 2ஆம் அதிகாரம்) அப்போதிலிருந்தே உலகத்தின் ஏதோ ஒரு பகுதியில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அது நித்திய நித்தியமாய் இருக்கும் (லூக்கா 1:33; 1கொரி 15:24).

மிகத்தெளிவாகவும், வித்தியாசப்படுத்தப்பட்டும் வசனங்களில் சபை விவரிக்கப்பட்டிருந்தாலும் ஜனங்கள் அதை கண்டுபிடிப்பதில்லை. ஏன்?

பெரும்பாலான ஜனங்கள் இந்த பொக்கிஷத்தில் விருப்பமில்லா திருக்கிறார்கள் அல்லது அவர்கள் இதை தேடுவதில்லை, அல்லது ஒருவேளை அதை கண்டிருந்தாலும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாதிருப்பார்கள். மனித இனத்தின் பெரும்பகுதி ஒவ்வொரு திசைக்கும் செல்கிறது. ஒவ்வொரு இடத்தில் நோக்கியும் உண்மையான பொக்கிஷத்தைக் குறித்து அவர்கள் குருடர்களாயிருக்கிறார்கள். மேலும் அவர்கள் உண்மையை ஏற்றுக் கொள்ள

விருப்பமில்லாதவர்களாய், போலியான பொக்கிஷங்களால் ஏமாற்றப்படு கிறார்கள். இந்த போலியான பொக்கிஷம் என்பது மனிதர்களால் ஸ்தாபிக்கப் பட்ட சபையாகும். இதில் அநேக வாக்குத்தத்தங்கள் செய்யப்படுகின்றன. ஆனால், இவைகளின் தலைவர்களே அவைகளை நிறைவேற்ற முடிவ தில்லை. மனிதர்களுடைய பாரம்பரியமும், மனிதர்களால் உருவாக்கப் பட்ட மதங்களும் இன்றைய நாளின் ஒழுங்காய் இருக்கிறது. அவர்களால் பொக்கிஷங்கள் என அழைக்கப்படுபவைகள் எல்லாம் பொக்கிஷங்களே அல்ல.

இயேசு சொன்னார் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல் என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்ப தில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி; கர்ததாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் (மத்தேயு 7:21-23).

இன்றைய நாட்களில் இயேசு பேசின அந்த பொக்கிஷத்தை நாம் கண்டுபிடிக்க முடியுமா? நாம் நினைத்தால் அல்லது விரும்பினால் முடியும். ஆனால், நாம் அதைத்தேட வேண்டும். சத்தியத்தை நேசித்து தேவனுடைய வார்த்தைகளை ஆழமாகப் படிக்கும்போது நாம் அதை கண்டறிய முடியும். இந்த பொக்கிஷமானது உண்மையாகவே தேடப்பட்டு, கண்டறியப்பட்டு, அதன் மதிப்பு உணரப்படும்போது அதை கண்டுபிடித்தவன் அவனுக்கும் அந்த பொக்கிஷத்துக்கும் இடையில் உள்ள எதையும் அந்தப் பொக்கிஷத் திற்காக இழப்பான், அந்த பொக்கிஷத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தேவனுக்கு கீழ்ப்படிய எல்லாவற்றையும் செய்வான். அவன் கர்த்தரில் விசுவாசம் வைக்க விருப்பமுள்ளவனாயிருப்பான், தன்னுடைய பாவங்களி லிருந்து மனந்திரும்ப கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய தன்னுடைய பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற, கர்த்தருடைய சபையில் அங்கத்தினராக விருப்பமுடையவனாயிருப்பான். அவன் இந்த காரியங்களைக் குறித்து கர்த்தரிடத்திலோ, மற்றவர் களிடத்திலோ விவாதிக்கவோ, புகார் செய்யவோமாட்டான். அவன் மனப்பான்மை "கர்த்தாவே, நீர் கட்டளையிடும், நான் கீழ்ப்படிகிறேன்" என்றிருக்கும். அந்தப் பொக்கிஷத்தை அவன் கண்டறிந்து அதை சொந்த மாக்கிக் கொள்ளும்போது கர்த்தருடைய கட்டளைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றி அதை வைத்துக்கொள்ள விரும்புவான். ஏதாவது பலன்கள் இருக்குமா? இயேசு சொன்னார். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:33).

அந்த பொக்கிஷத்துக்கு சொந்தக்காரர் தேவனுடைய சித்தத்தை செய்த படியால் தேவனுடைய வாக்குதத்தங்களில் நிற்கிறார். இயேசு தான் கட்டுவேன் என்று வாக்குதத்தம் செய்த சபையில் இந்த மனுஷன் அங்கத்தினராக இருப்பது எவ்வளவு அருமையாயிருக்கிறது (மத்தேயு 16:18) கிறிஸ்துவின் மணவாட்டியாய் சபை இருக்கிறது அதற்காக அவர் மரித்தார் (எபேசியர் 5:25-27). கிறிஸ்து அந்த சபைக்குத் தலையாயிருக் கிறார். அவரே இரட்சகருமாயிருக்கிறார் (எபேசியர் 5:23). இந்த சபையை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கத்தான் இயேசு ஒருநாள் வரப்போகிறார் (1கொரிந்தியர் 15:24).

உங்களுடைய பொக்கிஷம் என்ன? இயேசுவால் பேசப்பட்டிருக்கிற இந்தப் பொக்கிஷத்தை நீங்கள் கண்டுபடித்துவிட்டீர்களா? அந்தப் பொக்கிஷத்தை நீங்கள் சொந்தமாக்கிக் கொண்டீர்களா? நித்திய ஜீவனாகிய பொக்கிஷம் உங்களுக்கு வேண்டுமென்றால் நீங்கள் இந்த பொக்கிஷத்தை கண்டுபிடிக்க வேண்டும், அதை சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும்.

**பென்னிமார்ட்டின்** **J.C. சோட்**

## நாளும் நடப்பும்

1. செவ்வாய் கிரகத்தில் ஆய்வு நடத்தும் வகையில் நாசாவால் வடிவமைக்கப்பட்ட "போனிக்ஸ்" ஆய்வுக்கலன் விண்ணில் செலுத்தப்பட்டது.
2. மும்பையில் 111 மி.மீ கனமழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு.
3. வேளாண் வளர்ச்சியை துரிதப்படுத்துவதே முதல் வேலை குடியரசுத்தலைவரான பின் பிரதிபா முதல் பேச்சு.
4. இந்தியாவில் 32,000 பள்ளிகள் மாணவர் ஒருவர் கூட இல்லாமல் செயல்பட்டு வருவதாக அரசு ஆய்வில் தெரிய வந்துள்ளது.
5. பீகார், ஒரிசாவில் வரலாறு காணாத மழை, 81 பேர் சாவு, 1 கோடி பேர் பாதிப்பு.
6. தமிழகத்தில் 5,000 பட்டதாரி ஆசிரியர்கள் விரைவில் நியமனம் கல்வி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு.
7. ஃபிஜி நாட்டைச் சேர்ந்த ஆறு குழந்தைகளுக்கு சென்னை மருத்துவர்கள் இதய அறுவை சிகிச்சை செய்து மறுவாழ்வு கொடுத்துள்ளனர்.
8. கன மழையின் காரணமாக மேட்டூர் அணை இரண்டாம் முறையாக நிரம்பியது.

பெண்கள் பகுதி

# அவனுடைய மனைவி அவனுக்கு எதிராக மாறினாள்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, பக்தன் யோபு பலவித சோதனைகளுக்குட்பட்டு, வாதிக்கப்பட்டு, அவையெல்லாவற்றையும் ஜெயித்து இரட்டிப்பான ஆசீர்வாதத்தை பெற்றான் என்பதை நாம் வேதத்தின் வாயிலாக அறிவோம்.

அடிமேல் அடியை வாங்கிய இந்த நல்ல மனிதனை சாத்தான் தொடர்ந்து வாதித்துக் கொண்டேயிருக்கிறான். பேய்த்தனமான, போர்க்கால திட்டத்தினடிப்படையில் காரியங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கும் சாத்தான், சோதனையின் உச்சக்கட்டமாக, பிசாசுக்கே உண்டான அறிவு முறையில், யோபின் மனைவியை யோபுவுக்கு எதிராக எழுப்பி தன் வேலையை முடிக்க தீர்மானிக்கிறான். ஒரே ஒரு வசனத்தில் இந்த பெண்மணியை குறித்து சொல்லப்பட்டிருந்தாலும் இவள் பல தொகுதிகளாக பேசிக்கொண்டேயிருக்கிறாள். அநேக சமயங்களில் ஒரே ஒரு வரியில் ஒருவருடைய முழு குணாதிசயங்களைப் பற்றியும் கூறி விடலாம். நம்முடைய பாஷையில் சொன்னால், "ஒரு சட்டி சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது போல. திருமதி. யோபு அவர்கள் சாத்தானிடம் போய் தன்னை அவனுக்கு அர்ப்பணித்து தன் கணவனுக்கு எதிராக நிறுத்திக் கொண்டாள். இதை நாம் எவ்வாறு அறிவோம்? முடிவாக சொல்லப்போனால், சாத்தான் எதை செய்யும்படி முயற்சித்துக் கொண்டிருந்தானோ அதை அவளே யோபுவுக்கு விரோதமாய்ச் செய்துவிட்டாள். **தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்** (2:9). பிசாசின் ஆயுதமாக அவள் தன்னை மாற்றிக் கொண்டாள். இப்பொழுது நமக்கு ஒரு கேள்வி எழும்புகிறது. ஏன் பிசாசு இவளை உயிரோடு விட்டு வைத்தான்? ஒருவேளை இவள் தன் பிள்ளைகளுடன் மரித்து போயிருந்திருப்பாளானால், இந்த பரிதாபமான நிலையில் இருக்கும் யோபு, மனைவி சாகாமல் உயிரோடு இருந்திருந்தாளென்றால் தன் பக்கமாக நின்று தனக்கு ஆதரவாக இருந்திருப்பாள் என்று ஒரு பொய்யான ஆதங்கப் பட்டிருப்பான். ஆனால், அவள் வாழ்ந்து தன் சொந்த வீட்டில், தானே தன் கணவனுக்கு விரோதி என்பதை நிரூபித்தாள். அவள் மரித்து அவளை அடக்கம் பண்ணுதல் என்பது சுலபமான காரியம். அநேக காரியங்கள் சாவை விட கொடுமையானது.

ஏன் சாத்தானுடைய அடி இவ்வளவு பெரியதாயிருந்தது? ஏனென்றால், மிகப்பெரிய சோதனை, நாம் யாரை மிக அதிகமாக நேசிக்கிறோமோ அவர்கள் மூலமாகத்தான் நமக்கு வரும். நன்மைக்கோ அல்லது தீமைக்கோ நம்மை ஆளாக்கிவிட அவர்களின் அளவுக்கதிகமான தாக்கம் காரணமாகி விடுகிறது. கீழ்நோக்கி ஒருவர் அதிகமாக இழுக்கும் போது, நல்ல மனிதர்கள் கூட ஆகாயத்திலிருந்து தள்ளப்பட்டுவிடுவார்கள். இதைப்பற்றி ஒரு அறிஞன் கூறும்போது **அவன் ஒரு கொடியவனை வானத்திற்கு உயர்த்துவான். அவள் ஒரு தூதனை கீழே இழுத்துவிடுவாள்.**

ஆனால், பக்தன் யோபு இதற்கு விதிவிலக்கு. தன் மனைவிக்கு அவன் பதிலானது கடுமையாக இருக்க வில்லை. ஆனால், அது ஒரு கண்டிப்புடன் கூட உறுதியான கண்டித்துணர்த்துவதாக இருந்தது. **நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய்** (யோபு. 2:10). அவளுடைய கூற்று ஏன் பயித்தியகாரத்தனமாயிருந்தது? அந்த மனிதன் ஏற்கனவே எல்லாவற்றையும் இழந்திருந்தான். ஒன்றைத்தவிர, அது அவன் தேவன் மேல் வைத்திருந்த **பிடிப்பு**, பரலோகத்தோடு தொடர்பு கொள்ள அவன் கொண்டிருந்த **விசுவாசம்**. அவள் மனைவியோ அந்தத் தொடர்பை துண்டித்து, தேவன்மேல் வைத்திருந்த பற்றை முறிக்க முயற்சித்தாள். அவள் சொற்படி கேட்டிருந்தால், அது நித்திய அழிவுள்ள பாதாளத்திற்கு, மிக வேகமாக அவனை அனுப்பி வைத்திருக்கும். எனவே அவளை **பயித்தியக்காரி** என்று சொன்னதில் தவறேதுமில்லை. அவள் பயித்தியக்காரி மட்டுமல்ல, காரியங்களை முறைகேடாக புரிந்து வைத்திருந்தாள். காரியங்களை முறையாக கற்றுக் கொள்ளாதவர்களை முட்டாள் என்று சொல்லலாம், திருமதி யோபு இந்தக் கணக்குக்கு கட்டுப்பட்டவளாயிருந்தாள். ஆனால், யோபு மிகத் தெளிவாக, மிக சீக்கிரமாக தன் மனைவியின் தவறான சிந்தனையை புரிந்து கொண்டு தன் தீர்மானத்தில் உறுதியாயிருந்தான்.

என்னதான் யோபு உறுதியாய் இருந்தாலும், தன் மனைவியின் மூலம் வந்த அடி எல்லா அடிகளைக் காட்டிலும் மிகவும் வேதனைதரக்கூடியதாக இருந்தது. ஏனென்றால், நாம் அதிகமாக நேசிக்கக் கூடியவர்களிடமிருந்து அடி வருமானால் அதுதான் அதிக வேதனையைக் கொடுக்கும். அவளுடைய ஆலோசனையை யோபு நிராகரித்த போதிலும் தன் பிள்ளைகளைப் பெற்ற ஒரு தாயாக இருந்து கொண்டு விரோதிகள் பக்கம் நின்று இவளும் ஒரு விரோதியாக இருந்தால் அது யாருக்குத்தான் லேசான காரியமாக இருக்கும்? யோபு இங்கே சொல்வதை பாருங்கள், **"என் பிராண சிநேகிதர் எல்லாரும் என்னை வெறுக்கிறார்கள்"** (19:19).

மனிதனுக்கு தேவையானவைகளில் மிகப்பிரதானமானது எப்போதும் யாராவது ஒருவர் நம்மை ஊக்குவித்துக் கொண்டேயிருக்க வேண்டு மென்பது. அதனால்தான் சாத்தானின் வல்லமையான ஆயுதம் ஒரு மனிதனை எப்போதும் நிலைகுழையச் செய்து அவனை குப்புறத் தள்ளுகிறதாய் இருக்கிறது. வகைதேடிச் சுற்றித் திரிகிறான் என்று வசனம் சொல்வதில் தவறேதுமில்லை. மிருகங்களை வளர்ப்பவர் கூட அவைகள் நல்ல காரியம் செய்யும்போது அவைகளை தட்டிக் கொடுத்து பரிசுகளைக் கொடுக்கிறார்கள். மனதளவிலே பாதிக்கப்பட்டிருக்கும் ஒருவரிடம், ஒரு வார்த்தை அவனை புகழ்ந்து பேசும்போது அவனின் பெலம் கூடும். இங்கே, யோபுவின் மனைவி யோபுவை பெலமிழக்கச் செய்துவிட்டாள்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! பல வழிகளில் மனைவியின் செயல் கணவனை விசுவாசத்தில் இருந்து கீழே தள்ளிவிடக் கூடியதாய் இருக்கிறது. அதில் சிலவழிகள் பற்றி இங்கே காண்போம்.

1. ஓயாத் தொல்லை : இருப்பதை விட மேலும், மேலும் கேட்டுக் கொண்டேயிருப்பது. ஏன் புது பொருள் வாங்கக் கூடாது? பழையதில் எத்தனை நாள் வாழ்வது? உன்னுடையது, என்னுடையது என்று பேசுவது. இப்படி ஓயாமல் பெண்கள் பேசிக் கொண்டேயிருப்பார்கள்.

2. ஓயாமல் கணவனைப்பற்றி குறை கூறிக்கொண்டேயிருப்பது.

3. தான் ஒன்றும் செய்யாமல் தன் கணவனை மூலதனமாக வைத்துக் கொண்டு தனக்கு பெருமை சேர்த்துக் கொள்ளும் ஒரு வகையான தந்திரப் போக்கு.

4. கணவனுக்கு ஆறுதல் தேவைப்படும்பொழுது ஒன்றும் தெரியாதவர்கள் போல் அமைதியாக இருந்துவிடும் தன்மை.

இப்பேர்ப்பட்ட காரியங்களை பெண்கள் தொடர்ந்து செய்தால் வானளவ உயர்ந்தவர்களை கூட கீழே தள்ளிவிட வாய்ப்புள்ளது. ஆகவே, எப்போதும் ஊக்கப்படுத்தும் வார்த்தைகள் மிகவும் அவசியம். எல்லா பிரச்சனைகளையும் அது தீர்த்து வைத்துவிடும். அதுவும் ஆவிக்குரிய ஊக்கப்படுத்தும் முறைக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும். நீதிமானாகிய யோபு எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டு, சரீரத்திலும், மனதிலும் குழம்பியிருக்கும்போது அவனுக்கு தேவைப்பட்டது ஊக்கப்படுத்தும் வார்த்தைகள். அது அவனுக்கு கிடைக்கவில்லை. ஆனால், தொடர்ந்து மிக உறுதியாக எப்போதும் இராத அளவுக்கு தன் தேவன் மேல் மிக அதிக பிடிப்பு கொண்டுவிட்டான். சோதனையில் வெற்றி பெற்றான். இரண்டத்தனையாய் ஆசீர்வாதம் பெற்றான்.

ஆக, கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இந்த உலகம், உலகத்திற்குரியவைகளில் மேல் நாம் அதிக நாட்டமும், நம்பிக்கையும் வைக்கக்கூடாது. யோபு நீதிமானும், உத்தமனுமாயிருந்தான் என்று வாசிக்கிறோம். கட்டாயம் அவன் மனைவிக்கும் கொஞ்சமாவது நல்ல உள்ளம் இருந்துதான் இருக்கும். செல்வச்செழிப்பிலே வாழ்ந்த இவள் தன் கணவன் பக்கம் கொஞ்சமாவது நின்றிருந்திருப்பாள். யோபு 1:5ல் நாம் வாசிக்கும்போது **விருந்து செய்கிற நாள் முறை முடிகிறபோது, யோபு; ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப் படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின் படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான் இந்தப்பிரகாரமாக யோபு அந்நாட்களிளெல்லாம் செய்து வருவான்.** கட்டாயமாக இந்தக் காரியங்களையெல்லாம் செய்யும்போது இவளும் கூடவே இருந்திருக்க வாய்ப்புகள் இருந்திருக்கின்றன. இருப்பினும் தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்று இவள் சொல்லியிருக்கிறாள் என்றால், ஒருவேளை இவள் தேவனை விட தன் பிள்ளைகளையும், சொத்துக் களையும் அதிகமாக நேசித்திருக்கிறாள். அவைகளுக்கு முதலிடம் கொடுத்திருக்கிறாள். எனவேதான், அவைகள் இல்லாமல் போகும்போது தேவனை தூஷிக்கலாம் என்ற எண்ணம் அவளை ஆட்கொண்டு விட்டது. **முதலாவது, தேவன்** என்ற மாபெரும் உண்மையை அறியாத பெண்ணாக இருந்ததின் விளைவுதான் இது என்று நாம் சொல்லலாம். தேவனா? உலகமா? என்று வரும்போது நாம் தேவனுக்கும், அவர் காரியங்களுக்கும், அதாவது அவர் கொடுத்திருக்கும் வேத வசனத்திற்கும் முதலிடம் கொடுக்கும்போது பயித்தியக்காரத்தனமான பேச்சு நம்மிடம் இருக்காது. எப்போதும் தேவன் மீதே சார்ந்திருப்போம். அப்படிச் செய்ய ஜெபிப்போம்! ஆமென்.

**ரேச்சல்நாயகம்**

வாலிபர் பகுதி

# கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாயிருப்போம்

பிரியமான வாலிப நெஞ்சங்களே, உங்களை மறுபடியும் இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த உலகத்திலே நாம் பார்க்கும்போது எல்லா வகையான பிரச்சனை களையும் நாம் பார்க்கிறோம். உதாரணமாக, பகை, போர், கொலைகள், கருக்கலைப்பு, பாலியில் பலாத்காரங்கள், சமுதாயப் பின்னணி, மதப் பின்னணி மற்றும் பதவிப் பின்னணியை அடிப்படையாக வைத்து பட்சபாதம் காட்டுதல், வியாபாரங்களில் ஏமாற்று, மோசடி, திருட்டுப் போன்ற காரியங்கள் இந்த உலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுபோன்ற காரியங்கள் நம்மை அதிகமாக துக்கப்படுத்துகின்றன. இவைகளின் முடிவைக்காண நாம் விரும்புகிறோம். ஒருவேளை நாம் இந்த உலகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரியங்களைப் போல நம் கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைபெறுவதில்லை என்று நினைக்கத் தோன்றும் ஆனால், இதைப்பற்றி நீங்கள் ஆழமாக சிந்தித்துப்பார்க்க வேண்டும் என்று உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன். உலக முழுவதையும் நாம் பார்க்கும் போது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை பிரிவினை, மாயமாலம், கள்ள உபதேசங்கள், கிறிஸ்தவர்கள் உலகத்தாரைப் போன்று வாழ்க்கை நடத்துதல், பொய், ஏமாற்று, சபை காரியங்களில் ஈடுபாடின்மை போன்ற காரியங்கள் சீரழித்து வருகின்றன. மேலும் இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் இல்லங்களில் வேத வாசிப்பும், ஜெபமும் கிடையாது. அதுமாத்திரமல்லாமல் கிறிஸ்தவர்கள் அனுதினமும் தங்கள் குழந்தைகளுக்கு வேதாகமத்தைப் போதிப்பதில்லை. இன்னும் அநேக கிறிஸ்தவர்கள் தேவனையும், அவருடைய ராஜ்யத்தையும் விட அதிகமாக உலகப் பொருள்களை நேசிப்பதும், தேவனுடைய ராஜ்யம் விரிவடை வதற்காக கொடுக்க வேண்டிய அளவிற்கு காணிக்கைகளைக் கொடுக்காமல் இருப்பதுமாய் இருக்கிறார்கள்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைபெறும் இதுபோன்ற காரியங்கள் நம்மை அதிகமாக துக்கப்படுத்த வேண்டும். சபையிலே இதுபோன்ற காரியங்களை களைந்தெறிய நாம் பாடுபடவேண்டும். இதுபோன்ற பிரச்சனைகள் எல்லாம் உலகத்திலும், சபையிலும் ஏன் காணப்படுகின்றன? அநேகப் பிரச்சனைகள் ஜனங்கள் சரியாக சிந்திக்காமல் இருப்பதால் தான் ஏற்படுகின்றன. நாம் எப்படிப்பட்ட சிந்தையுடையவர்களாய் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அப்படி சிந்தியாமல் இருப்பதால் அநேக பிரச்சனைகளை நாம் சந்திக்கிறோம்.

உலகத்தில் இருப்பவர்கள் மாம்சப்பிரகாரமாக சிந்திக்கிறார்கள். இன்றைய நாட்களில் அநேக விசுவாசிகள் உலகத்தில் உள்ளவர்களைப் போல் சிந்திக்கிறார்கள். அநேக கிறிஸ்தவர்கள் "எல்லோரும் இப்படித்தான் நினைக்கிறார்கள், சொல்கிறார்கள், செய்கிறார்கள்" என்றெல்லாம் பேசக்கேட்டிருக்கிறோம். பிரியமான வாலிப நெஞ்சங்களே! தேவன் நாம் இப்படித் தான் சிந்திக்க, பேச, செயல்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரா? இந்தக் கேள்விகளுக்கு வேத வசனங்களின் துணை கொண்டு நான் பதிலளிக்க விரும்புகிறேன். ரோமர் 12:2ல் "நீங்கள் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்று நாம் வாசிக்கிறோம். அதாவது, தேவன் நாம் இந்த உலகத்தின் மக்களிலிருந்து வித்தியாசமாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார். நாம் இந்த உலகத்திலிருந்து வித்தியாசமாயிருக்க வேண்டும் என்றால் நீங்களும், நானும் வித்தியாசமாயிருக்க வேண்டும். நாம் உயிர்வாழ தேவன் இந்த உலகத்தைத்தான் நமக்குத்தந்திருக்கிறார் ஆயினும் நாம் "கிறிஸ்தவர்கள்" என்ற தனித்தன்மையை இந்த உலகத்தில் பதிக்க வேண்டும். இது நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாய் இருந்தால் சாத்தியமாகும். பிலிப்பியர் 2:5ல் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்று வாசிக்கிறோம். இதன் அர்த்தம் என்னவென்றால் நாம் கிறிஸ்துவைப் போலவே சிந்திக்க வேண்டும், அவருடைய மனப்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும், அவருடைய உணர்வுகளைக் கொண்டிருக்க வேண்டும், அவரைப் போலவே நோக்கம் உடையவர்களாய் இருக்க வேண்டும். இது தேவனிடத்திலிருந்து நமக்கான கட்டளையாயிருக்கிறது.

## கிறிஸ்துவின் சிந்தையை எப்படி வளர்த்துக்கொள்வது?

முதலாவது கிறிஸ்துவைப்போல சிந்திக்க நமக்குத் தீவிரமான, உண்மையான ஆசை இருக்க வேண்டும், நம்முடைய மனதை நாம் அடக்க வேண்டும், அவருடைய வார்த்தைகளை நாம் படிக்க வேண்டும், தியானிக்க வேண்டும், நம் மனதை இயேசுவின் வார்த்தைகளால் நிரப்ப வேண்டும். சரி, அடுத்ததாக கிறிஸ்துவின் சிந்தையின் தன்மைகளைப் பார்ப்போம்.

## I <u>தாழ்மை :</u>

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் (பிலிப்பியர் 2:6,7). நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தாழ்மைக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார். பெருமையும், கர்வமும் பிடித்த இந்த உலகத்தில் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய இயேசு தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர்

சாயலானார். நாமெல்லாரும் இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற கட்டளைப்பெற்றிருக்கிறோம். இந்த பெருமையானது கர்த்தர் வெறுக்கும் காரியங்களில் ஒன்றாக இருக்கிறது. மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன் என்று நீதிமொழிகள் 16:5ல் நாம் வாசிக்கிறோம்.

வேதாகமத்தில் தேவனுக்கு விரோதமாக பெருமை பாராட்டியவர்கள் ஒன்றுமில்லாமல் போயிருக்கிறார்கள். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் என்பதை நாம் நன்றாக உணர்ந்து செயல்படவேண்டும். எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திச் சென்ற மோசே ஒரு மகாபெரிய தலைவனாயிருந்தும் தன்னை முற்றிலுமாக தாழ்த்தினான் என்று பார்க்கிறோம். எண்ணாகமம் 12:3ல் மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் என்று நாம் வாசிக்கி றோம். எனவே நாம் ஏற்ற காலத்திலே தேவன் நம்மை உயர்த்தும் படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க வேண்டும்.

## II அன்பு :-

"அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1யோவான் 4:8). அன்பான தேவனை பெற்றுக் கொண்டிருக்கிற நாம் அன்பிலே குறைவுள்ளவர்களாயிருக்கிறோம். முன்பு ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் அன்புக்கு பேர்போனவர்கள், நான் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் நிலங்கள், உடைமைகளையெல்லாம் விற்று இல்லாத வர்களுக்கு கொடுத்து உதவிச் செய்தார்கள், எனவே, சகோதரர்கள் மத்தியில் சமத்துவம் ஏற்பட்டது. ஆனால், இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் மத்தியில் அன்புக்கு மிகப்பெரிய குறைச்சல் ஏற்பட்டுள்ளது. கிறிஸ்து எவ்வளவு அன்பும் மனதுருக்கமும் உடையவராக இருந்தார். எனவே, கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொண்டு அன்பில்லாமல் இருந்தால் அப்படிச் செய்து வீணான காரியமாகும். யோவான் 13:34,35 வசனங்களில் இயேசு "நீங்கள் ஒரிவரியலாருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பா யிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்". நாம் மற்றவர்களிடம் அன்பு செலுத்துவதினால் கிறிஸ்துவின் நாமத்தை நிச்சயமாகவே மகிமைப்படுத்த முடியும். இந்த உலகமானது கிறிஸ்தவர் களிடமிருந்து அதிகமான காரியங்களை எதிர்பார்க்கிறது. ஏதோ ஒரு தவறான காரியத்தை கிறிஸ்தவர்கள் செய்துவிட்டால் இவர்களா இப்படிச்

செய்தார்கள் என்று ஆச்சரியத்தோடு கேட்பதுண்டு. ஏனென்றால், கிறிஸ்துவைப்பற்றியும், கிறிஸ்துவின் போதனைகளைப்பற்றியும் உலகத்தாருக்குக்கூட ஓரளவு தெரியும் எனவே தான் நம்மிடமிருந்து நற்குணங்களை அவர்கள் அதிகமாக எதிர்பார்ப்பார்கள் எனவே தான் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் நாம் கிறிஸ்துவின் சீஷர்களென்று இந்த உலகம் அறிந்து கொள்ளும் அதினால் தேவனுடைய நாமம் மகிமைப்படும். ஆவியின் கனியைக் கொடுக்க கிறிஸ்தவர்களாகிய நாம் கடமைப்பட்டிருக்கிறோம் ஆவியின் கனியில் அன்புதான் முதலிடத்தைப்பிடிக்கிறது. அன்பானது, எல்லா நற்காரியங்களுக்கும் ஊற்றும், உறைவிடமுமாயிருக்கிறது. நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்போது மற்றவர்களுடைய தப்பிதங்களை நாம் மன்னிக்கும் குணாதிசயத்தை உடையவர்களாய் காணப்படுவோம். இது தேவன் நம்முடைய தப்பிதங்களை மன்னிக்க வகைச் செய்யும், அதுமாத்திரமல்ல, நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்போது நிச்சயமாகவே நாம் தேவனிடத்தில் அன்பு கூருவோம் அப்போது அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளுவோம். தேவன் நாம் இந்த உலகத்தாரை விட வித்தியாசமாயிருக்க வேண்டும் என்று நம்மை எதிர்பார்க்கிறார். எனவே, உலகத்திலும், சபையிலும் ஏற்படும் பிரச்சனைகளைத் தவிர்க்க நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாய் காணப்படுவோம், கிறிஸ்தவர்களாய் இருந்து உலகத்திலே ஒரு தாக்கத்தை ஏற்படுத்து வோம் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம் கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்!.

***பென்னி மார்ட்டின்***

## மலைப்பிரசங்கம் - யாக்கோபு நிரூபம் - ஒப்புமை

| | | | |
|---|---|---|---|
| 1. | **கேளுங்கள் (மத். 7:7)** | - | **கேளுங்கள் (யாத். 1:5)** |
| 2. | **நல்ல ஈவு (மத். 7:11)** | - | **நன்மையான ஈவு (1:17)** |
| 3. | **செயல் (7:24)** | - | **செயல் (1:22)** |
| 4. | **பரஸ்பர எதிர்பார்ப்பு (7:12)** | - | **பரஸ்பர எதிர்பார்ப்பு (2:8)** |
| 5. | **கனி கொடுப்பது (7:16)** | - | **கனி கொடுப்பது (3:12)** |
| 6. | **சமாதானம் (5:9)** | - | **சமாதானம் (3:18)** |

சிறுவர் பகுதி

# நீங்கள் எங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் தெரியுமா?


எனக்குப் பிரியமான சிறுதம்பி தங்கைகளே, உங்கள் யாவருக்கும் குழந்தைகளை அரவணைத்து அன்பு காட்டின இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் உங்களை இந்த இதழின் வழியாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. சரி, இந்த மாதம் வித்தியாசமான சில காரியங்களை கற்றுக் கொள்ள போகிறோம். அவைகள் உங்கள் படிப்பு காரியங்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும் என நம்புகிறேன். சரி, வாருங்கள் பாடத்திற்குச் செல்லலாம்.

உங்கள் வீட்டு கதவு எண் என்ன? நீங்கள் வசிக்கும் வீதியின் பெயர் என்ன? எந்த ஊரில் இருக்கிறீர்கள்? இது போன்ற சிலர் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் கண்டிப்பாக பதில் சொல்லிவிடுவீர்கள்! அப்படித்தானே! ஏன் இன்னும் இதை சார்ந்த வேறே தகவல்களையும் கூடுமானால் கொடுப்பீர்கள்! ஆம், பிள்ளைகளே நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள் என்பதை பற்றிய தகவல்கள் மிகவும் அவசியமே! அதைவைத்துத்தான் உங்களின் உறவினரையோ, நண்பர்களையோ நீங்கள் கடிதத்தின் வழியாக தொடர்பு கொள்ள முடியும். அவர்களும் உங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும்.

இப்படி பலருக்கு உங்கள் விலாசத்தை கொடுத்து கொடுத்து அது உங்களின் மனதில் ஆழப்பதிந்திருக்கும். உங்கள் விலாசத்தை மட்டுமல்ல உங்கள் நண்பர்களின் விலாசத்தையும் நீங்கள் தெரிந்து வைத்திருப்பீர்கள். சரி, சரி, இதையெல்லாம் விடுங்கள். இது நம்முடைய பாடத்திற்கு உண்டாண வைகள் அல்ல.

உண்மையாகவே நாம் எங்கு வாழ்கிறோம் என்பதை **பெரிய அளவில்** யோசித்து இருக்கிறீர்களா? என்றைக்காவது சூரியனிலிருந்து மூன்றாவது கிரகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற வியத்தகு காரியத்தை யோசித்து இருக்கிறீர்களா? மற்றும் நட்சத்திர ஒளி வீதியில் வாழ்கிறோம் என்று தெரியுமா? கண்டிப்பாக இல்லை என்று தான் நினைக்கிறேன். நாம் பூமி என்ற கிரகத்திலே வாழ்கிறோம் என்ற காரியத்தையே பலர் அறியாமல் இருக்கிறது உங்களுக்கு ஆச்சரியமாகவே இருக்கும்.

நாம் வாழ்கின்றது சூரிய குடும்பத்தில் ஒன்றான பூமி என்னும் கிரகத்தில். சூரிய குடும்பம் என்பது சூரியன், சந்திரன், கிரகங்கள், வாழ் நட்சத்திரங்களை உள்ளடக்கிய ஒன்று. நம் சூரிய குடும்பத்தில் ஒரு நட்சத்திரம் உண்டு. அதுதான் "சூரியன்" மற்றுமாக ஒன்பது கிரகங்கள் உள்ளன. அவை புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன்



மற்றும் ப்ளூடோ ஆகும். வியாழன் கிரகம் தான் இவையெல்லாவற்றிலும் பெரியது, மற்றுமாக, ப்ளூட்டோ தான் இவையெல்லாவற்றிலும் சிறிய கிரகம் சூரியனிடமிருந்து மிக தொலைவில் இருக்கும் கிரகமும் அதுதான். அதாவது, சூரியனை அது ஒருமுறை சுற்றிவர 250 பூமி ஆண்டு காலம் ஆகுமாம். (ஒரு பூமி ஆண்டு $365^{1}/_{4}$ நாட்கள்)

நாம் வாழ்கின்ற பூமி ஐந்தாவது பெரிய கிரகமாகும். சூரியனிடமிருந்து 93 மில்லியன் மைல்கள் தூரத்தில் உள்ளது. அது 600 மைல்களை (சூரியன்) சுற்றி வருவதற்கு ஒரு ஆண்டு ஆகிறது. பூமியானது தேவன் தனக்கு வகுத்த துல்லியமான பாதையில் சுற்றி வருகிறது. எவ்வளவு துல்லியமாக என்றால் பூமி அது சுற்றும் போது 18 மைல்களுக்கு $^{1}/_{9}$ inch- க்கு பதிலாக $^{1}/_{10}$ inch பாதை மாறினால் பூமியில் யாரும் வாழ முடியாது. பாருங்கள் தேவனுடைய கரத்தின் வல்லமையை!.

வான மண்டல ஆராய்ச்சியாளர்கள், நாம் பால் வழி நட்சத்திர மண்டலத்தில் வசிக்கிறோம் என்று கூறுகிறார்கள். இந்த மண்டலத்தில் பல மில்லியன்கள் நட்சத்திரங்கள் உள்ளன. அவைகளில் சூரியனும் ஒன்று. இந்த மண்டலம் மிக நீளமான ஒன்று. இதை ஒளியின் வேகத்தில் சென்று கடக்க நினைத்தால் (18,6000 மைல்/நொடி) அதை கடக்க 100,000 வருடங்கள் ஆகுமாம். இந்த பால்வழி நட்சத்திர மண்டலங்கள் போலவே பல பில்லியன் நட்சத்திர மண்டலங்கள் உள்ளவனாம். என்ன தலையே சுற்றுகிறதா? இது மனிதனால் புரிந்து கொள்வதற்கு கடினமான ஒன்று. நாம் இருக்கும் சூரிய குடும்பம் பால்வழி நட்சத்திர மண்டலத்தில் உள்ளது. அதில் பூமி என்ற ஒரு புள்ளியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கண்டிப்பாகவே இவை நம் சிந்தனைக்கு அப்பாற்பட்டது. ஆனால், இதையெல்லாம் படைத்தது யார்? ஆம், பிள்ளைகளே நாம் நேசிக்கிற தேவனே!

**சங். 33:6,8,9**ல் கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது. பூமியெல்லாம் கர்த்தருக்கு பயப்படுவதாக. அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும்.

**சங். 148:5**ல் அவர் நாமத்தை துதிப்பதை தவிர வேறே ஏதாவது வேலை நமக்கு வேண்டுமா?! பிள்ளைகளே இப்படிப்பட்ட பிரமிக்கத் தக்க தேவனை துதிப்பது ஒன்றே அவருக்கும் பிரியம் நமக்கும் அது ஆசீர்வாதமாக இருக்கும்.

**R.A.R. NAYAGAM.**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

நாம் இயேசு ஸ்தாபித்த ஒன்றான மெய் சபையின் ஆளுகை அமைப்பைப் பற்றிப் படித்துக் கொண்டிருக்கிறோம். "கிறிஸ்துவின் சபையின் ஆளுகை அமைப்பு" மனிதர்கள் ஏற்படுத்தியிருக்கிற மார்க்கப் பிரிவினைக் கூட்டத்திலிருந்து கிறிஸ்துவின் சபையை வேறுபடுத்திக்காட்டுவதற்கு, புதிய ஏற்பாட்டில் தேவன் கொடுத்திருக்கிற மாதிரியின் ஒரு பகுதியாகும்.

கடந்த மாதம் புதிய ஏற்பாட்டிலிருந்து கீழ்காணும் அநேகக் கேள்விகளுக்கு பதில் அளித்தோம். **முதலாவது,** எதற்கெல்லாம் மூப்பர்கள் பொறுப்பாளிகளாயிருககிறார்கள்? **இரண்டாவது,** ஒரு சகோதரர் மூப்பராக சேவை செய்வதற்கு முன்பு என்னென்ன தகுதிகளை உடையவர்களாயிருக்க வேண்டும் என தேவன் சொல்கிறார்? **மூன்றாவது**, மூப்பர்களுக்கு ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவனின் பொறுப்புகள் என்ன என்று படிக்க ஆரம்பித்தோம். நாம் மூப்பர்களை அறிந்து கொள்ள வேண்டும். அவர்களைப் பாராட்ட வேண்டும் என்று கவனித்தோம்; மேலும் அவர்களை உயர்வாக மதிக்க வேண்டும்; நேசிக்க வேண்டும்; கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களுக்கும், மூப்பர்களுக்கும் இடையில் சமாதானத்தை நிச்சயப்படுத்த சாத்தியமானவை களைச் செய்ய வேண்டும் போன்ற காரியங்களை நாம் கவனித்தோம்.

இப்போது, நாம் மூப்பர்களுக்கு ஒவ்வொரு கிறிஸ்தவனின் பொறுப்பு களைப் பற்றி தேவன் சொல்கிற காரியங்களை அநேக வசனங்களின் துணை கொண்டு நாம் பார்ப்போம்.

1 தீமோத்தேயு 5:17யை நாம் வாசிக்கும் போது, நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களுக்கு, தனிப்பட்ட கிறிஸ்தவர்களின் அநேக கடமைகள் இருக்கிறது என்று நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட உண்மையுள்ள சகோதரர்கள் "இரட்டிப்பான கனத்திற்கு" பாத்திரவான்களாயிருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது, மூப்பர்கள் தங்கள் வாழ்க்கை, போதனை போன்றவற்றால் சம்பாதித்த கனம் மற்றும் மரியாதையை அவர்களுக்கு **முதலாவது** கொடுக்க வேண்டும்.

இந்த வசனத்திலும், மத்தேயு 15:4-6 வசனங்களிலும், **இரண்டாவது கனம்,** முழுநேரம் கர்த்தருடைய வார்த்தையிலும், உபதேசத்திலும் பிரயாசப்படும் மூப்பர்களுக்கு பொருளாதார உதவிகள் அளிப்பதைக் குறிக்கும். அதாவது, இந்த பொருளாதார உதவி கர்த்தருக்காக அவர்கள் படும் பிரயாசத்திற்கான உதவித் தொகையாயிருக்கிறது.

1தீமோத்தேயு 5:19ல் நாம் வாசிக்கும்போது, கிறிஸ்தவர்கள் மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் குற்றச்சாட்டை, இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று தேவன் கட்டளை யிட்டிருக்கிறார். ஏனென்றால், ஒவ்வொரு மூப்பனும் மூப்பனாக நியமிக்கப் படுவதற்கு முன்பு தேவனுடைய கடுமையான தகுதியம்சத்திற்கு உட்பட வேண்டும். எனவே தான் தேவன் இதை தெளிவாக கட்டளையிடுகிறார். எனவே, தான் நாம் இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் மூப்பர்களுக்கு விரோதமாக குற்றஞ்சாட்ட ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

எபிரெயர் 13:17ல் நாம் வாசிக்கும்போது, நம்முடைய அன்புள்ள தேவன், தாங்கள் சேவை செய்கின்ற பிராந்திய சபையை கண்காணிக்கும் மூப்பர்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று நம்மை கேட்டுக் கொள்கிறார். மூப்பர்கள் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டை சரியாகப் போதிக்கும் போது மூப்பர்களுடைய சித்தத்திற்கு நம் சித்தத்தை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

மேலும் நீங்களும், நானும் நீதியுள்ள மூப்பர்களின் இருதயங்களில் சந்தோஷத்தை உண்டுபண்ணுகிற நீதியுள்ள வாழ்க்கையை வாழப் பாடுபட வேண்டும். மாறாக, மூப்பர்களை துக்கப்படுத்துகிற அநீதியான வாழ்க்கையை நாம் வாழ்வோமானால் அது நமக்கு பிரயோஜனமாயிராது அதாவது நாம் தேவனை விட்டுப் பிரிந்து, எரிநரகத்தில் நித்தியத்தை கழிப்போம்.

தேவனுடைய நாமம் மகிமைப்படத்தக்கதாக மூப்பர்கள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற, எல்லாவற்றிலும் அவர்களுக்கு உதவவும் ஒத்துழைக்கவும் வேண்டுமென்று நிச்சயமாக தேவன் உங்களிட மிருந்தும், என்னிடமிருந்தும் தேவன் எதிர்பார்க்கிறார்.

சுருக்கமாக, நீங்களும், நானும் மூப்பர்களை அறிந்து கொள்ள வேண்டும், அவர்களைப் பாராட்ட வேண்டும்; அவர்களை உயர்வாக மதிக்க வேண்டும்; அவர்களை நேசிக்க வேண்டும்; நமக்குள் சமாதானமாயிருக்க வேண்டும்; இரட்டிப்பான கனத்தை அவர்களுக்கு கொடுக்க வேண்டும்; அவர்களுக்கு விரோதமாக செய்யப்படும் குற்றச்சாட்டை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடாது; அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும்; அவர்களுடைய விருப்பத்திற்கு நாம் விருப்பத்தை உட்படுத்த வேண்டும்; அவர்கள் துக்கத்தோடு அல்ல சந்தோஷத்தோடே தங்கள் வேலையைச் செய்ய நாம் வாழ வேண்டும்.

புதிய ஏற்பாடு உதவிக்காரர்கள் என அழைக்கப்படும் விசேஷ வகுப்பைச் சார்ந்த சகோதரர்களையும் பற்றிப்பேசுகிறது.

ஒவ்வொரு பிராந்திய கிறிஸ்துவின் சபையிலும் தேவபக்தியுள்ள மூப்பர்களின் கண்காணிப்பின் கீழ் சேவை செய்யும் விசேஷித்த வேலைக் காரர்களாக "உதவிக்காரர்கள்" இருக்கிறார்கள்.

ஒரு சகோதரர் உதவிக்காரராக நியமிக்கப்படுவதற்கு முன்பு அந்த சகோதரன் 1தீமோத்தேயு 3:8-13 வசனங்களில் பட்டியலிடப்பட்டிருக்கிற தகுதி அம்சத்திற்கு உட்படவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். இந்த வசனங்களில், ஒரு சகோதரன் உதவிக்காரனாகத் தகுதிப் பெறுவதற்கு அந்தச் சகோதரன் தேவபக்திக்கேற்ற வாழ்க்கையை வாழவேண்டும்; திருமணமான வராக இருக்க வேண்டும்; கீழ்ப்படிதலுள்ள மரியாதையுள்ள பிள்ளைகளை உடையவர்களாக இருக்க வேண்டும்; மேலும் நல்லொழுக்கமுள்ள, அவதூறு பண்ணாத, தெளிந்த புத்தியுள்ள, எல்லாவற்றிலேயும் உண்மையுள்ள மனைவியைப் பெற்றிருக்க வேண்டும்.

கடைசியாக, கிறிஸ்துவின் சபையின் தனிப்பட்ட அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். பிலிப்பியர் 1:1ல் தேவன் கண்காணிகளையும், உதவிக்கார ரையும் குறிப்பிடுகிறார். வேறு யாரையெல்லாம் தேவன் குறிப்பிடுகிறார்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்களைப் பற்றிப் பேசுகிறார். இது தெளிவாக தனிப்பட்ட கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது! நமக்கு அது எப்படித் தெரியும்? அதைத் தெரிந்து கொள்வதற்கு அநேக வழிகள் இருக்கிறது.

**முதலாவது,** கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் ஒருவரே கிறிஸ்தவர் ஏனென்றால், அவர் கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக் கிறார். ரோமர் 6:3,4; கலாத்தியர் 3:26,27.

**இரண்டாவது,** பரிசுத்தவான் என மொழியாக்கம் செய்யப் பட்டிருக்கும் பதம் பரிசுத்தமுள்ள ஒரு நபரைக் குறிக்கிறது. இதன் அர்த்தம், தொடர் பாவத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு தேவனுக்கென்று தன்னை அர்ப்பணித்த ஒரு ஆணையோ, அல்லது பெண்ணையோ குறிக்கும்.

தேவன் பரிசுத்தராயிருக்கிறபடியால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறார் (1பேதுரு 1:13-16) எனவே, பிலிப்பியர் 1:1ல் பரிசுத்தவான் என்ற பதம் தெளிவாக தனிப்பட்ட கிறிஸ்தவர்களைக் குறிக்கும்.

எனவே, பிலிப்பியர் 1:1லிருந்து கிறிஸ்துவின் சரீரத்தின் தனிப்பட்ட அங்கத்தினர்களைக் குறிப்பதற்கான ஒரு பதம் "பரிசுத்தவான்" என்பதாகும்.

"பரிசுத்தவான்" என்ற வார்த்தை அல்லாமல் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்களுக்கு வேறென்ன வேதாகமப்பெயர்கள் இருக்கின்றன?.

கண்காணிகளின் வேலையை விவரிப்பதற்கு தேவன் உபயோகப் படுத்திய பல்வேறு வார்த்தைகள், அந்த வேலையைப்பற்றி ஏதோ முக்கியமான ஒன்றை குறிக்கிறது என்று ஏற்கனவே நாம் பார்த்தோம். அதே காரியம், புதிய ஏற்பாட்டில் தம்முடைய குமாரனைப் பின்பற்றுபவர்களை விவரிப்பதற்கு பயன்படுத்துவது சம்பந்தமான காரியங்களுக்கு உண்மை யாய் இருக்கிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:7யை நாம் வாசிக்கும்போது அப்போஸ்தலனாகிய பவுல் துரோவா பட்டணத்தில் செய்த காரியங்கள் எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. வாரத்தின் முதல்நாளில் (ஞாயிற்றுக் கிழமை) சீஷர்களுடன் சபை கூடி வந்திருக்கிறார்.

இங்கே, "சீஷன்" என்கிற பதமானது ஒருவருடைய உபதேசத்தைப் படிக்கும் இன்னொரு நபரைக் குறிக்கும். அதைப்படிப்பதற்கான நோக்கம் போதிப்பவருக்கு கீழ்ப்படிந்து அவருடைய மாதிரியைப் பின்பற்றுவதாகும். ஆகவே, இயேசுவின் புதிய ஏற்பாட்டைப்படிக்கிற ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசுவை பின்பற்றுபவர்களாக இருக்கவேண்டும்.

நம்முடைய குறிக்கோள் என்னவென்றால், இயேசுவின் உபதேசத் திற்கு கீழ்ப்படிந்து அவரைப்போலவே வாழ பாடுபடுவதாகும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 11:26ல் நாம் வாசிக்கும்போது லூக்கா தேவனால் ஏவப்பட்டு இயேசுவின் சீஷர்கள் முதன்முதலாக அந்தியோகியாவில் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டதை பதிவு செய்திருக்கிறார். இந்த அழகான பெயர் நாம் இயேசுவை சார்ந்தவர்க ளென்றும், நாம் இந்தப் பூமியில் வாழும் ஒவ்வொரு நாளும் இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் பின்பற்றுவதற்கு அர்ப்பணிக்கப்பட்டிருக் கிறோம் என்பதைக்காட்டுகிறது.

1யோவான் 3:14ல் தேவன் கிறிஸ்தவர்களை சகோதரர்களாகக் குறிப்பிடுகிறார். இது, கிறிஸ்தவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்றும், கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகள் என்பதையும் காட்டுகிறது. நாம் இந்த

உலகத்தில் உள்ள பெரிய குடும்பத்தின் அங்கத்தினர்கள் அதாவது, தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தின் அங்கத்தினர்கள். தேவனுடைய பிள்ளைகளாகவும் கிறிஸ்துவுக்குள் சகோதரர்களாகவும் இருப்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்!.

கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்கள் சுவிசேஷகர் அல்லது பிரசங்கியாரை உள்ளடக்கியதாகும். இவரும் சபையில் அங்கத்தினர் தான் இவருடைய செயல்பாடு அல்லது வேலை தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதும், போதிப்பதுமாகும். எனவே, பிரசங்கியாருக்கு பிராந்திய சபையின் செயல்பாடுகளை கண்காணிக்கவோ அல்லது நடத்தவோ கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டில் எந்த அதிகாரமும் கொடுக்கப்படவில்லை. ஒரு பிரசங்கியாருக்கு இருக்கும் ஒரே அதிகாரம் தேவனுடைய அதிகாரப் பூர்வமான வார்த்தைகளை கூட்டாமலும், குறைக்காமலும் பிரசங்கிப்ப தாகும். எனவே, கிறிஸ்துவின் ஒன்றான மெய்சபையின் சுலபமான ஆளுகை அமைப்பு சம்மந்தமாக, வசனங்களில் இதுகாறும் நாம் பார்த்த காரியங்களை சுருக்கமாக பார்ப்போம்!.

**முதலாவது,** கிறிஸ்து அவருடைய சபைக்குத்தலையாயிருக்கிறார். அதன் அர்த்தம் எந்த மனித தலைவரோ யாதொரு பூமிக்குரிய தலைமை யகமோ இல்லை என்பதாகும்.

**இரண்டாவது,** சகோதரர்கள் தேவனுடைய தகுதி அம்சத்திற்கு உட்படும் ஒவ்வொரு கிறிஸ்துவின் சபையிலும் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மூப்பர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று தேவன் கட்டளை யிடுகிறார். அதுமாத்திரமல்ல, அவர்கள் திருமணமானவர்களாக இருக்க வேண்டும், பிள்ளைகள் கீழ்ப்படிதலுள்ள கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும் போதக சமர்த்தனு மாய் இருக்க வேண்டும்.

**மூன்றாவது,** புதிய ஏற்பாட்டில் தேவன் குறிப்பிட்டிருக்கிற தகுதி அம்சத்திற்குப் பொருந்தும் சகோதரர்கள், மூப்பர்களின் தலைமையின் கீழ் ஒவ்வொரு பிராந்திய சபையிலும் உதவிக்காரர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

**நான்காவது,** கிறிஸ்துவின் சரீரத்தில் பரிசுத்தவான்கள், கிறிஸ்தவர்கள், சகோதரர்கள் என அழைக்கப்படுகின்ற அங்கித்தினர்கள் இருக்கிறார்கள். இது பிரசங்கியாரை அல்லது சுவிசேஷகரை உள்ளடக்கியதாகும்.

பிரியமானவர்களே, இப்போது உங்களிடம் அநேக கேள்விகளை நான் கேட்க அனுமதியுங்கள். நீங்கள் செல்லும் சபை இப்படி ஒழுங்குப் படுத்தப்பட்டிருக்கிறதா அல்லது இப்படிச் செய்ய முயற்சிக்கிறதா? இவ்விதத்தில் அந்த சபை ஒழுங்குபடுத்தபடவில்லையென்றால், அது கிறிஸ்துவின் ஒன்றான மெய் சபையாய் இருக்க முடியுமா? கிறிஸ்து இல்லாத ஒரு சபையில் ஆராதனை செய்வதும், ஊழியம் செய்தும் ஆத்துமாவிற்கு ஆபத்தைக் கொண்டு வராதா? உங்கள் நித்தியத்தை பரலோகத்தில் செலவிட நாங்கள் விரும்புகிறோம். எனவே தான், இயேசு தம்முடைய சுயரத்தத் தினாலே சம்பாதித்த, ஸ்தாபித்த ஒன்றான மெய் சபையை நீங்கள் கண்டறி யவும் அதில் அங்கத்தினராகவும் நாங்கள் உதவி செய்ய சந்தோஷமாய் ஆயத்தமாயிருக்கிறோம்.

**பென்னிமார்ட்டின்** **சார்லிடிபால்மா**

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

## பாடம் -2. அப்போஸ்தலனாகிய பேதுரு.

**அ**ப்போஸ்தலனாக அழைக்கப்பட்ட யாக்கோபு கொல்லப்பட்ட பின்பு ஏரோது பேதுருவையும் பிடிக்கத் தொடர்ந்தான்! (அப். 12:3) யாக்கோபுவுக்கு தாங்கள் கொடுத்த தண்டனையைக் குறித்து யூதரும், ஏரோதும் வெற்றிக் களிப்புடன் இருந்திருக்கலாம் அதே சந்தோஷத்துடன் பேருதுவையும் பிடித்து தண்டித்து விடலாம் என்று எண்ணி பேதுருவைத் தொடர்ந்தான் ஏரோது. உண்மையிலே வெற்றி அடைந்தது யூதரும் ஏரோதும் அல்ல! **இரத்த சாட்சிகளான** அப்போஸ்தலரே.

எப்படியெனில் இயேசுவைப் பற்றின நற்செய்தியை பேசக்கூடாது என்றும், அவரை மறுதலிக்க வேண்டும் என்றும், யூதர்கள் கங்கனம் கட்டிக் கொண்டு செயல்பட்டனர். ஆனால் அப்போஸ்தலரோ நாங்கள் கண்டவை களையும் கேட்டவைகளையும் பேசாமல் இருக்கக்கூடாதே என்றார்கள் (அப். 4:20) மனுஷருக்குக் கீழ்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்படிகிறதே அவசியமாயிருக்கிறது (அப். 5:29) என்று கூறும் பொழுது யூதர்கள் உண்மையிலே தோல்விதான் அடைந்தனர். இவைகளைக் குறித்து ஏரோதும் அறிந்திருப்பான். யாக்கோபை கொலை செய்தது ஒரு வெற்றி அல்ல! அது தோல்வியினால் ஏற்பட்ட விளைவே! யாக்கோபு தனது மரண விளிம்பில் கூட ஏரோதுக்கு பயப்படவில்லை. தனது மரணத்தின் மூலமாக ஏரோதைத் தோல்வியுறச் செய்தார். அந்தக் கோபத்திலே பேதுருவை பிடிக்கத் தொடர்ந்திருக்கிறான். பேதுருவைப் பிடித்தான் சிறையிலடைத்தான் (அப். 12:4,5).

இந்த பூமியிலே, பரிசுத்தவான்களின் பாடுகள், சிறையில் அடைந்த அவமானங்கள், தியாக மரணங்கள் இவைகளைக் குறித்து தேவன் காணாமல் இருப்பாரோ! நிச்சயமாக இல்லை!. அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும், பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட வர்களின் விசயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து, அவர்களுக்கு நியாயம் செய்யாமலிருப்பாரோ? (லூக். 18:7) நிச்சயம் செய்வார்.

ஆதாமின் குமாரர்களான காயீன், ஆபேல் வரலாற்றில் காயீன் தனக்கு ஒரு கெடுதியும் செய்யாத தனது சகோதரன் ஆபேலைக் கொலை செய்தான்! ஆபேலைக் கொலை செய்யுமளவுக்கு அவன் அப்படி என்ன செய்தான்? ஆபேல் விசுவாசத்தினாலே தேவனுக்கு பலிசெலுத்தினான் (எபி. 11:4). இங்கே காயீனுடைய காணிக்கையிலும் மேன்மையானதை ஆபேல் செலுத்தி

தேவனால் நீதிமான் என்று சாட்சியைப் பெற்றான். இதைப் பொறுக்க மனமில்லாமல் பொறாமையினாலே காயீன் ஆபேலைக் கொன்றான். (ஆதி.4:1-8) இது குறித்த காரியங்களை எல்லாம் தேவன் அறிந்திருந்தார். கவனித்துக் கொண்டிருந்தார். எனவே அவர் காயீனை நோக்கி உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே? அவனை என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது என்று அடுக்கடுகாக தேவன் காயீனைப் பார்த்துக் கேட்கிறார். (ஆதி. 4:10-12) ஆபேலின் இரத்த முதல் பலிபீடத்துக்கும் தேவாலயத்துக்கும் நடுவே கொலையுண்ட சகரியாவின் இரத்தம் வரைக்கும், உலக தோற்ற முதற் கொண்டு சிந்தப்பட்ட சகல தீர்க்கதரிசிகளுடைய இரத்தப் பழியும் இந்த சந்ததி யினிடத்தில் நிச்சயமாக கேட்கப்படும் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறினார் (லூக். 11:50). மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் (கலாத் 6:7).

யாக்கோபை கொலை செய்த ஏரோது பேதுருவையும் சிறையி லடைத்து அவமானப்படுத்தினானே அவன் நிம்மதியாக, சந்தோஷமாக இறுதி நாட்களை கழித்திருப்பானா? நிச்சயமாக இல்லவே இல்லை! முடிவில் எரோது புழுப்புழுத்து இறந்தான். தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே! ஆகவே அவனைக் கர்த்தர் அடித்தார் அவன் புழுப் புழுத்து இறந்தான் (அப். 12:23). ஆனால் பேதுருவையோ இரட்சித்தார். சிறையிலிருந்து காப்பாற்றினார் (அப். 12:17-19) பேதுருவின் இரத்த சாட்சியை படிக்குமுன் அவரைக்குறித்த சில காரியங்களை படிப்போம்.

## I பேதுருவின் குடும்ப விபரமும் அவரது வாழ்க்கையும்

இவரது இயற்பெயர் சீமோன் என்பதாகும். இவர் பயந்த சுபாவமும், மணலைப் போன்ற உறுதியில்லாத தன்மையுடையவராக இருந்தபடியால் இயேசுகிறிஸ்து இவரை கல்லைப் போன்ற உறுதியுள்ளவராக்கினார். எனவே, பேதுரு எனப் பேரிட்டார் (யோ. 1:42) பேதுரு யோனாவின் குமாரன் (மத். 16:17) விசுவாசமுள்ள குடும்பம். மேசியாவின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தவர். இவருக்கு அந்தியோரா என்ற சகோதரன் உண்டு (யோ. 1:40) திருமணமானவர் (1கொரி. 9:5) சொந்த ஊர் பெத்சாயிதா பட்டணம் (யோ 1:44) கப்பர் நகூமில் குடியிருந்திருக்கலாம் ஏனென்றால், இவரது மனைவியின் தாயார் இங்கு தான் வசித்து வந்தார் (மத். 8:14). பேதுருவின் தொழில் மீன்பிடித்தல். இதிலே இவர் ஒரு மொத்த வியாபாரியாக இருந்திருக்கலாம். இவரது வாழ்க்கை கலிலேயாக் கடல்தான். கல்வி கற்காதவராக இருந்திருக்கிறார் (அப். 2:7,8).

இயேசு கிறிஸ்து கப்பர் நாகூமில் போதகம் பண்ணும்போது அவரது போதனையை கேட்டார். கெனேசரத்துக் கடலருகே இயேசு போதகம் பண்ணும் போதும் கேட்டிருக்கிறார் (லூக். 5:1-5). யோவான் ஸ்நானகனின்

சீஷராக இருந்தார். யோவான் இயேசுவை மேசியா என்று அறிக்கையிட்டதின் பேரில் பேதுரு இயேசுவைப் பின்பற்றினார் (யோ. 1:35-37). இருப்பினும் இயேசு யோவானைப் போல ஒரு போதகர் என்றே நினைத்து மீண்டும் மீன் பிடிக்கும் தொழிலுக்குச் சென்றான் (லூக். 5:5).

அதன்பின்பு இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையில் பேதுருவையும் அவனது சகோதரன் அந்திரேயாவையும் அழைத்து உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குகிறேன் என்றார் உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டு அவருக்குப் பின் சென்றார்கள் (மாற்கு 1:16-18) இவர்களுடன் தொழிலில் கூட்டாளியாகவும் நண்பர்களாகவும் இருந்த யாக்கோபும் அவனது சகோதரன் யோவானும் பேருதுவைப் போலவே இயேசுவின் அழைப்பை ஏற்றுக் கொண்டு பின் சென்றவர்களாவர்

**II பேதுருவின் குணமும், உடலமைப்பும்**

12 அப்போஸ்தலர்களிடையே இவரது குணம் சற்று வித்தியாசமானதாக இருந்திருக்கிறது. இவர் எதற்கெடுத்தாலும் முந்திரிக் கொட்டை போல முந்திக் கொண்டு உடனே பதில் சொல்லக்கூடியவர் ஆகவே, இவருக்கு முந்தினவன் என்று பேராயிற்று (மத். 10:2) ஒரு முறை இயேசு பிலிப்புச், செசரியா திசைகளில் வந்த போது அவர் தமது 12 சீஷர்களைப் பார்த்து ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார் உடனே முந்தினவன் பேதுரு அவருக்குப் பதில் சொல்லி பாராட்டும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டார் (மத். 16:13-17). ஆனால் உடனே இதே அதிகாரத்தில் (மத். 16ல்) இயேசு தமது மரணத்தைக் குறித்தும், உயிர்த்தெழுதலைக் குறித்தும் முன்னுரைத்தபோது, அவரை தனியே அழைத்துக் கொண்டு போய் ஆண்டவரே உமக்கு நேரிடக் கூடாதே இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று கடிந்து கொள்ளத் தொடங்கினான் அவரோ திரும்பி பேதுருவைப் பார்த்து எனக்குப் பின்னாகப் போ சாத்தானே நீ எனக்கு இடறலாயிருக்கிறாய் தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கேற்றவைகளை சிந்திக்கிறாய் என்று கடுஞ் சொல்லுக்குப் பாத்திரவானாக மாறுகிறார் (வச. 22-23).

பேதுரு இயேசுவிடம் பயமும், பக்தியும், தாழ்மையுமுடையவராகவும், தனது தவறுகளை ஒப்புக் கொள்ளும் மனோபாவமுடையவராகவும் காணப்பட்டார். இயேசு கிறிஸ்துவை மூன்று முறை மறுதலித்தவருக்கு இயேசு உயிர்த்தெழுந்த பின் மூன்று முறை இயேசு பேதுருவைப் பார்த்து நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? நீ என்னை நேசிக்கிறாயா? என்று கேட்டதற்கு பேதுரு துக்கப்பட்டு ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் அறிவீர் என்றான். (யோ. 20:15 - 17).

**(தொடரும்)** **K. பாஸ்கர், சிறுமுகை.**

# காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக

தேவனுடைய பரிசுத்த நாமத்திற்கு துதியும், கனமும், மகிமையும் இன்றும் என்றும் சதாகாலமும் உண்டாவதாக "திருமறை ஆசான்" வாசகர் களாகிய உங்கள் ஒவ்வொருவரையும், சாலமோனைவிடப் பெரியவரான இயேசு கிறிஸ்துவின் அன்பான நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவிக் கின்றோம். சுகமாயிருப்பீர்களாக.

எல்லா மனிதர்களின் முழுமுயற்சியும், நான் என் வாழ்நாளில் பேர், புகழ், செல்வம் இவைகளையெல்லாம் எப்படியாயினும் சரி அது கடல் கடந்து சென்றாகிலும் பரவாயில்லை என்கிற அடக்க முடியாத ஆசை நம் ஒவ்வொருவரையும் உந்தித் தள்ளுகிறது என்றால் மிகையாகாது.

பிரசங்கி 12:11 ஞானிகளின் வாக்கியங்கள் தாற்றுக்கோல்கள் போலவும், சங்கத் தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகள் போலவும் இருக்கிறது. ஜெபசிந்தையுடன் இந்த செய்தியை தியானிப்போம். நமக்கு இது மிகவும் பிரயோஜனமாய் இருக்கும் பிரியமானவர்களே.

**A. <u>சாலமோனின் வாழ்வு</u> :** இந்த மிகச் சிறந்த ஞானியைப் பற்றி எழுதிட முடியாது. ஆனாலும் ஓரளவுக்கு உங்கள் மனக்கண்களுக்கு முன் கொண்டு வர முயற்சி செய்திருக்கிறேன்.

2 சாமுவேல் 12:25 நாத்தான்வேல் கர்த்தர் நிமித்தம் சாலமோனுக்கு யெதிதியா என்று பெயரிட்டான். இந்த சாலமோன் தேவனுடைய ஆலயத்தை ஏழுவருடங்கள் கட்டினான் (1ராஜா 6:38). அதில் தனக்காக ஒரு மண்டபத்தைக் கட்டினான் (யோவான் 10:23) நம்முடைய ஆண்டவரும் சாலமோன் மண்டபத்தில் உலாவியிருக்கிறார்.

**<u>ஞானம்</u>** (2நாளாகமம் 1:7-12) தேவனிடம் மிகுதியான ஞானத்தைக் கேட்டுப்பெற்றுக் கொண்டான். அவனைப் போலொத்த ஞானி இன்றும் இதற்குப் பின்பும் எழும்பப்போவதில்லை என்பது தேவனுடைய வாக்குத்தத்தம். ஒருமுறை இரண்டு ஸ்தீரிகள் ஒரு ஆண்பிள்ளையை கொண்டு வந்து இருவருமே அந்தப் பிள்ளையை தன்னுடையது என உரிமை கொண்டாடினர். எவ்வளவு சிக்கலான வழக்கு பார்த்தீர்களா? (1ராஜா 3:16-18 வாசித்துப் பாருங்கள்) மிகவும் சாதுர்யமாக அந்த வழக்கை கையாண்டான். அதை இன்றளவும் வரலாறு பேசுகிறது. 1 ராஜா 4:29 சாலமோன் கடற்கரை மணலைப் போல் மனோ விருத்தியைப் பெற்றான்.

சாலமோனின் ஞானத்திற்கொப்பாக நம்மில் யாரும் இல்லை யென்றால் மிகையாகாது (யாக்கோபு 1:5) உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாய் இருந்தால் தேவனிடத்தில் கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும்.

**சாலமோனின் கீர்த்தி:** (1ராஜா 10:18-20) சாலமோன் தன் சிங்காசனத்தை (1ராஜா 10:14-18) தந்தத்தினால் செய்து அதைப் பொன் தகட்டால் மூடினான் (1 ராஜா 10:21) சாலமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருட்டாக எண்ணப்படவில்லை. 1 ராஜா 10:24-25 மற்ற ராஜாக்கள்

வெள்ளிப்பாத்திரங்கள், பொற்பாத்திரங்கள், வஸ்திரங்கள், ஆயுதங்கள், கந்த வர்க்கங்கள் குதிரைகள், கோவேறு கழுதைகளையும் கொண்டு வருவார்கள்.

(வசனம் 26) 1400 இரதங்கள், 12000 குதிரை வீரர்கள் இருந்தனர் சென்ற இடங்களிலெல்லாம் வெற்றிகள் கிடைத்தது. சாலமோன் நாற்பதாண்டுகள் தேசத்தை ஆண்டான் (1கொரி. 1:20 தேவன் இந்த உலக ஞானத்தைப் பைத்தியமாக்குகிறார்)

**ஒரு நாள் சாப்பாட்டிற்கான செலவு:** (1 ராஜா 4:22-23) நாள் ஒன்றிற்கு 30 மரக்கால் மெல்லிய மாவு, 60 மரக்கால் மாவு, கலைமான்கள், வெளிமான்கள், வரையாடுகள், மேய்ச்சலிலிருந்து வந்த இருபது மாடுகளும் 100 ஆடுகளுமாம். இவ்வளவு சம்பிரமாய் சாப்பிட்டான். இராஜபோஜனம் என்பது இதுதான் போலிருக்கிறது. இன்றைய நாட்களில் இப்படி யாரும் சாப்பிட்டிருக்க முடியுமா? என்பது நமது கேள்வியாய் இருக்கிறது (ரோமர் 14:17) தேவனுடைய ராஜ்யம் புசிப்பதும், குடிப்பதுமல்ல.

**பிரசங்கி 2:4-11:** சாலமோன் தனக்காக தோட்டங்கள், சிங்கார வனங்கள், கனிதரும் விருட்சங்கள், குளங்களை வெட்டினான். வேலைக் காரர்கள், வேலைக்காரிகள், திரளான மிருக ஜீவன்கள் திரண்ட ஆஸ்தி, வெள்ளி, பொன், ராஜசம்பத்து, கீதவாத்தியங்களை வாசிக்கிறவர்கள் சுருக்கமாகச் சொன்னால் தன் கண்ணும், மனதும் விரும்பிய எதையுமே வேண்டாமென்று விலக்கவில்லையாம். சாலமோன் தன் வாழ்வின் அனுபவமாகச் சொல்லுவது. "எல்லாம் மாயை மனதிற்கு சஞ்சலத்தை உண்டாக்குகிறதுமாயிருக்கிறது" (2கொரி. 4:18 நாம் காணும் யாவும் ஒருநாள் அழியும். 2பேது 3:10-12).

**சாலமோனின் அனுபவ ஞானம்:** இந்த பூமியில் தன்னிஷ்டப்படி யெல்லாம் சுபிட்சமாக வாழ்ந்த ஒரு மனிதனை உதாரணமாய் காண்பிக்க வேண்டும் என்றாலும் சரி, எப்படி வாழக்கூடாது என்பதற்கு உதாரணமும் இந்த சாலமோன் தான் (1ராஜா 4:32-33).

சாலமோன் 3000 நீதிமொழிகளை எழுதினான். அதில் நமக்கு அநேக ஆவிக்குரிய காரியங்கள் உண்டு. பிரசங்கி, உன்னதப்பாட்டு, ஆகிய புத்தகங்களும் சாலமோனால் எழுதப்பட்டதுதான். ஒரு மனிதனின் சரீர வாழ்வை அப்படியே படம் பிடித்துக் காட்டும் ஒரு புத்தகம் எது என்றால் அது பிரசங்கியின் புத்தகம் தான்.

**பிரசங்கி 12:1-8:** ஆதாம் 930 வருடங்கள் வாழ்ந்தான் (ஆதி. 5:3). (ஆதி 5:8) சேத் 912 வருடங்களும், மெத்துசாலா என்பவர் 969 வருடங்களும் உயிர் வாழ்ந்துள்ளனர். ஆதி 6:3ல் மனுஷனின் ஆயுசு வருடங்கள் 120 என்றும் (சங்கீதம் 90:10ல்). எங்கள் ஆயுசின் வருஷங்கள் 70 பெலத்தின் மிகுதியால் 80 வருஷம். இந்த எண்பது வருடமும் எப்படி செலவாகிறது. (சகரியா 12:1) (தானியேல் 5:23) நம் சுவாசம் தேவன் கையிலிருக்கிறது, படிப்பிற்காக கொஞ்சகாலம், மனைவியைத் தேட கொஞ்ச காலம், பிள்ளைகளைப் பெற்று வளர்த்து படிக்க வைப்பதில் கொஞ்ச காலம். இவையெல்லாம் போக முதிர் வயதில் வியாதிப் படுக்கையிலே கொஞ்ச காலம். மீதி நாட்களும் பிர 12:2-3. கண்கள் ஒளி மங்கி, மழைமேகம் போன்று அடிக்கடி கண்களில் நீர்கோர்த்து, வீட்டுக் காவலாளிகளைப் போலுள்ள

கைகள் தளர்ந்து போய், பெலசாலியான முதுகு கூனிப்போய், எந்திரம் போன்ற பற்கள் விழுந்து போனதால் வெறும் வாயை அசை போட்டுக் கொண்டும் கண்கள் இருளடைந்து போகுமாம்.

**வசனம் 4-6** (வாதுமை மரம் பூ பூத்து) தலையெல்லாம் நரை விழுந்து தலையிலுள்ள பேன்கள் கூட சுமைபோல எண்ணும் நாட்கள் வரும் (பசுந்தீபனம்) ஒரு காலத்தில் இருபது இட்லிகளை சாப்பிட்ட நபர் தற்போது இரண்டு இட்லி சாப்பிட்டாலே பெரிய விஷயம். ஒரு குவளை தண்ணீரை கையில் எடுத்து வாயினிடத்தில் கொண்டுபோவதற்குள் போதும், போதும் என்றாகிவிடும், அடடா மரணம் வந்துவிட்டால் பரவாயில்லையே என நினைக்கும் காலம் வரும். சிறுநீர் கழிக்க எழுந்து கழிவறை செல்லலாம் என நினைத்து எழுந்து கொள்வதற்குள் (பொற்கிண்ணி நசுங்கி, வெள்ளி கயறு கட்டுவிட்டு) படுக்கையிலேயே கழித்து விடுவார்.

பிரியமானவர்களே! காரியத்தின் கடைத்தொகையை கேட்டீர்களா? இன்னும் ஒரு வேதனை என்னவென்றால் (பிரசங்கி 2:18-19) தான் சம்பாதித்த எல்லாவற்றையும் தன்னுடன் கொண்டு போக முடியாமல் பிறனுக்காக விட்டுவிட்டு போக வேண்டியதாகும். அதை அனுபவிக்கப் போகிறவன், ஞானியோ, மூடனோ நமக்குத் தெரியாதே, (1தீமோ 6:6-8) நாம் நமது தாயின் வயிற்றியிலிருந்து நிர்வாணியாக வந்து, நிர்வாணியாகவே போகிறோம். எல்லா மனிதரின் முடிவும் இதுதான் (பிரசங்கி 12:13).

அதற்குள் தான், எத்தனை, போட்டி, பொறாமைகள் நான் பெரியவானா? நீ பெரியவானா? சண்டைகள் பதவிச் சண்டைகள் எத்தனை? ஜாதிச் சண்டைகள் எத்தனை? பண ஆசையால் வரும் பிரச்சனைகள் மேற்கண்ட காரணங்களுக்காக இதுவரை சிந்தப்பட்ட இரத்தத்தைக் கணக்குப் பார்த்தால் அது இந்துமஹா சமுத்திரத்தை விட அதிகமல்லவா? இதற்கு ஒரு தீர்வே இல்லையா? இருக்கிறது. பரிசுத்த வேதாகமம் பதில் சொல்கிறது.


**உங்களுக்கு ஒரு மீட்பர் தேவை** (எபேசியர் 4:8)

கிறிஸ்து உன்னதத்திலிருந்து வந்து நம்மேல் வைத்த அன்பினால் தம் ஜீவனையே தந்தார். இயேசு இந்த பூமியில் எல்லாராலும் வெறுக்கப்பட்டார் பரலோகத்தில் அவர்தான் ராஜாதிராஜா (மத். 8:20) பூமியில் அவருக்கு தலை சாய்க்க இடமில்லை. இன்று உலகமெல்லாம் அவரது விசுவாசிகள் இல்லாத நாடே இல்லை.

உங்களில் பலர் செல்வச் செழிப்புள்ள வாழ்வு வாழ்கிறவர்களா இருக்கலாம். ஆனால் உங்கள் வாழ்வின் முடிவு என்ன? மரணத்திற்குப்பின் உள்ள வாழ்வை எங்கே செலவிடப்போகிறீர்கள் பரமன் வாழும் இடத்திலா? பிசாசின் தூதர்கள் வாழும் நரக வேதனையான அக்கினி கடலிலா? இயேசுவிற்கு மரணத்திற்குப்பின் ஒரு உயிர்த்தெழுதல் இருந்தது என்றால் நமக்கும் அது நிச்சயம் (யோவா 5:28,29).

கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் நீங்கள் இரட்சிக்கப்பட்டால் (1கொரி 15:1-3) (மாற் 16:16) (அப். 2:38) அவரது சபையிலே (அப். 2:47) (ரோம 16:16). சேர்க்கப்படுவீர்கள். (யோவா 14:1-3) உங்களுக்கு ஒரு நித்திய வீடு உண்டு. (2கொரி 5:1-2) கிறிஸ்துவின் சுவிசேஷமே ஒரே வழி. சாலமோனின் வாழ்வு நமக்கு சிறந்த பாடம். நாம் நித்தியத்திற்காக வாழ்வோமாக.

அன்புடன், **S. பிச்சைமுத்து,** தூத்துக்குடி.



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008

## திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 - 7:30 |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 9:45 - 10:00 |
| SS மியூசிக் | TV | சனி | காலை | 7:30 - 7:45 |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

Advanced Bible Correspondence Course

ஆம், சத்தியம் விரும்பிகளுக்கும், பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்கும் பாக்கியம் வாழ்க்கையில் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஏங்குபவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 90 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.**
**தமிழ்நாடு. இந்தியா.**

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.
Ph : 04257 - 222555, 224555